# கிறிஸ்தவம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 11

(2016ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

மஹரகம

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

# கிறிஸ்தவம்

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 11

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீ லங்கா

**www.nie.lk**

**info@nie.lk**

கிறிஸ்தவம்

தரம் 11

ஆசிரியர் வழிகாட்டி

முதற்பதிப்பு 2016

தேசிய கல்வி நிறுவகம்

ISBN

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு

தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2016ஆம் ஆண்டிலிருந்து தரம் 7,11 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்

தேசிய கல்வி நிறுவகம்

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## கலைத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| **ஆலோசனை** | : | கல்விசார் அலுவல்கள் சபை<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **இணைப்பாளர்** | : | அருட்தந்தை கார்ல்டன் டி ஜோசப் சில்வா<br>செயற்திட்ட அதிகாரி - தேசிய கல்வி நிறுவகம் |
| | : | அருட்தந்தை எஸ்.அந்திரியாஸ் ஏ. பர்னாந்து அ.ம.தி<br>உதவி விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம் |

## ஆலோசகர் குழு

- பேராயர் அதி.வண. டிலோராஜ் கனகசபை
  இலங்கை திருச்சபை - கொழும்பு மறைமாவட்டம்
- பேராயர் அதி.வண. சாந்தா பிரான்சிஸ்
  இலங்கை திருச்சபை - குருணாகலை மறைமாவட்டம்
- பேராயர் அதி.வண. அருள் அறிவர். டேனியல் எஸ். தியாகராஜா
  தென்னிந்திய திருச்சபை
- அருள் அறிவர். ஏ.டப்ளியு. ஜெபனேசன்
  தலைவர் - இலங்கை மெதடிஸ்த திருஅவை
- அருட்பணி. பிரியந்த விஜேகுணவர்தன
  தலைவர் - இலங்கை பெப்டிஸ்த சங்கம்
- அருட்பணி. சார்லி ஜேன்ஸ்
  தலைவர் - கிறிஸ்தவ சீர்திருத்த சபை
- அருட்பணி. சமன் பெரேரா
  தலைவர் - பிரஸ்பட்டேரியன் திருச்சபை
- கொமிசனர் மெல்கம் இந்துருவகே
  பிரதேச முதல்வர் - இரட்சணிய சேனை
- அருட்பணி. டப்ளியு.பி. எபனேசர் ஜோசப்
  பொதுச் செயலாளர் - இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்
- அருட்பணி. ஹேஷான் டி சில்வா
  இலங்கை பெப்டிஸ்த சங்கம்

- திருமதி. எம். சபாரஞ்சன்
  கல்வி பணிப்பாளர்- சமய பகுதி, கல்வி அமைச்சு

- அருட்பணி. ஜே.ஏ. மிஹிரி டி சில்வா சல்காது
  நிறைவேற்று செயலாளர் - கிறிஸ்தவ கல்விக்கான ஆணைக்குழு, இ.தே.கி.ம

- அருட்பணி. வில்லியம் விஜேகோன்
  இலங்கை பெப்டிஸ்த சங்கம்.

## எழுத்தாளர் குழு

- அருட்பணி. ஜே.ஏ. மிஹிரி டி சில்வா சல்காது. முதுமாணி
  நிறைவேற்று செயலாளர்
  கிறிஸ்தவ கல்விக்கான ஆணைக்குழு, இ.தே.கி.ம

- திருமதி. நிலந்தி தீபா டி சில்வா. முதுமாணி
  பயிற்றப்பட்ட ஆசிரியர் (கிறிஸ்தவம்)
  மெதடிஸ்த உயர்தர பாடசாலை - மொரடுவ

- திருமதி. ரதிக்கா சமந்தி மென்டிஸ். முதுமாணி
  ஆசிரியர்
  பரி. தோமா கல்லூரி - கல்கிசை

- திருமதி.அருணி இந்திகா பெரேரா ஜயதுங்க. இளம்மாணி
  ஆசிரியர்
  பிஷப் கல்லூரி - கொழும்பு 03

- திருமதி.எம். ரேணுகா தமயந்தி. கலைமாணி
  ஆசிரியர்
  மாவத்தகம மத்திய மகா வித்தியாலயம் - குருநாகலை

- திருமதி. எம்.பி. செல்வநிதி பெரேரா
  ஆசிரிய ஆலோசகர் - கிறிஸ்தவம் (ஓய்வு)
  வெஸ்லி கல்லூரி - கொழும்பு 09

- செல்வி.த. ஸ்டெலா தர்ஷினி. இளம்மாணி
  இணைப்பாளர்
  கிறிஸ்தவ கல்விக்கான ஆணைக்குழு - இ.தே.கி.ம

**கணணி பதிப்பு** : செல்வி. த. ஸ்டெலா தர்ஷினி
திருமதி. எம்.பி. செல்வநிதி பெரேரா

அலுவலக உதவி -திரு. டயஸ் அமரசிங்க
திருமதி. எஸ். பிரியதர்சினி

# உள்ளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| கலைத்திட்டக் குழு | V |
| அறிமுகம் | viii |
| ஆசிரியர் கைந்நூலை பாவிப்பதற்கான அறிவுரைகள் | ix |
| தேசிய கல்வி இலக்குகள், அடிப்படைத் தேர்ச்சிகள் | x |
| பாடத்திட்டத்தின் நோக்கம், தேர்ச்சிகள் | xii |
| பாடத்திட்டம் | xiii |
| கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல் | 1-55 |

# அறிமுகம்

ஒழுக்காற்றல் நிறைந்த சமூகத்தை உருவாக்குவது இக்காலகட்டத்தின் அவசியமாகும். இதற்காக சமயமானது மகத்தான பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டே சமய பாடக் கலைத்திட்டமானது திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. முழுமை நிறைந்த பிள்ளையில் அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளிடைத்திறன் என்பனவற்றுடன் தனிநபர் ஆற்றலுடன் நற்பண்புகளும் வளர வேண்டுமென்பதே கலைத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.

பிள்ளைகள் இறையரசின் கோட்பாடுகளுக்கேற்ப கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதியாக நிலைத்து வாழும் கிறிஸ்துவை வாழ்வில் பிரதிபலித்தலே இக்கலைத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ நோக்கு, நிலைப்பாடு, உண்மை சத்தியங்கள் போன்ற தேர்ச்சிகளை மையமாகக் கொண்டு 6-11 வரையிலான வகுப்பு மாணவர் உச்ச பயனை அடையவேண்டுமென்பதே கிறிஸ்தவ பாடக் கலைத்திட்டத்தின் எதிர்பார்ப்பாகும்.

தரம் 11 இன் இறுதியில் சமூகத்தின் சவால்களுக்கு முகம் கொடுத்து கிறிஸ்தவ விழுமியங்களை வாழ்வில் பிரதிபலித்து சமூகத்தில் இறைவிசுவாசத்துடன் முழுமை நிறைந்த புதிய இளம் கிறிஸ்தவனாக உலகுக்கு வழங்குவது இக் கலைத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

மாணவ மையக் கல்வியினூடாக முன்மாதிரியாக செயற்பட்டு கிறிஸ்தவ அடையாளத்துடன் உலகில் ஒளிவீசும் இறையரசின் பிரஜைகளை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதே ஆசிரியரின் பிரதான கடமையாகும். இதற்கான தேர்ச்சிகளை மாணவரில் வளர்த்திட வழிகாட்டி நூலானது ஆசிரியருக்கு உறுதுணையாக அமையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

ஆசிரிய வழிகாட்டியின் செயற்பாடுகளினூடாக கிறிஸ்துவுக்கு சான்று பகரும் கிறிஸ்தவ பற்றுள்ள மாணவ பரம்பரையை நாட்டுக்கும் உலகுக்கும் வழங்கிடும் மகத்தான பணியை நிறைவேற்றிட புத்தாக்கத் திறனுடைய ஆசிரியராகிய நீங்கள் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள்.

## ஆசிரியர் வழிகாட்டி பாவிப்பதற்கான அறிவுரைகள்

கிறிஸ்தவ நெறிக்கு ஏற்ப வளமான வாழ்வுக்கு அவசியமான தேர்ச்சிகளின் அடிப்படையில் பாடசாலைக் கல்வியுடன் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கு இடமளித்து ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

அறிவு மையம் சார்ந்த பரீட்சை முறைகளின் கீழ் சிறந்த பெறுபேறுகளையும் அறிவையும் ஊட்டுகின்ற கல்வி முறையானது சிறந்தது அல்ல என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். கல்வியின் மூலம் உள்ளமும் கைகளும் ஊட்டம் பெற வேண்டும். இந்த இலக்கை நிறைவேற்றிக்கொள்ளும் முயற்சியில் இவ் ஆசிரியர் வழிகாட்டி நூலானது தயாரிக்கப்பட்டுள்ளது

ஆசிரியர் வழிகாட்டியானது பாட நூலுக்கும் பாடத்திட்டத்திற்கும் ஏற்ப எழுதப்பட்டுள்ளது. எனவே கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை இந்த வரையறைக்குள் ஒழுங்கமைத்துக் கொள்வது எமது கடமையாகும்.

- பாட பிரவேசமானது மிக முக்கியமானதாகையால் மாணவரின் ஆர்வத்தை தூண்டும் வகையில் பாடத்தை ஆரம்பியுங்கள்.
- பாட பிரவேசத்திற்கும் பாட விருத்திக்கும் அவசியமான தர உள்ளீடுகளைப் பயன்படுத்துங்கள்.
- மாணவரை சிறு குழுக்களாகப் பிரித்து குழு செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உசிதமான இடத்தினை தெரிவு செய்யுங்கள்.
- கற்றல் பேறுகளில் மாணவரின் வாழ்வை வளப்படுத்தும் வகையில் செயற்படுங்கள்.
- மாணவரின் விசுவாசத்தை விருத்திசெய்வதற்கு உறுதுணையாக இருங்கள்.

இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் கட்டாயமானதல்ல. அதற்கு வேறு முறைகளையும் பொருத்தமான வகையில் பாவிக்கலாம். இருப்பினும் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் முக்கியமானதாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் கிறிஸ்தவ மத விழுமியங்களை வளர்ப்பதிலும் பிரயோகிப்பதிலும் அதிக கவனத்தை செலுத்துங்கள்.

பாட ஆரம்பம் முதல் இறுதிவரை கணிப்பீடு செய்வதுடன் ஆற்றல், ஆற்றலற்ற நிலைக்கேற்ப பின்னூட்டல் மற்றும் முன்னூட்டலை பெற்றுக்கொடுக்க வேண்டும். நேர அட்டவணை தயாரிக்கும் போது இரண்டு பாடவேளைகளும் அடுத்தடுத்து அமையாது பாடத்தை நெறிப்படுத்துவது உங்களுடைய பொறுப்பாகும். பாடத்திற்கு எதிர்ப்பார்க்கப்படும் மதிப்பீட்டு கணிப்பீட்டு நியதிகளுக்கு ஏற்றவாறு பாடத்தை தயார்செய்யுங்கள். மதிப்பீட்டின்போது புள்ளி வழங்கும் முறைகளை மாணவருக்கு முன்னரே அறிவியுங்கள். நீங்கள் மாணவருக்கு வழங்கும் பயிற்சிகளை பிழையின்றி பரிசீலனை செய்துகொள்ளுங்கள்.

பாடங்களின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டுச்சூழல் என்ற பகுதியானது பெற்றோர் முதியோரின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படுதல் உகந்தது. அதற்கான அறிவுரைகளை அதிபர், பாட ஆசிரியர் மூலமாக பெற்றோர்களுக்கும் முதியோருக்கும் வழங்குதல் வேண்டும்.

**சமயத்துறை (கிறிஸ்தவம்)**
**தேசிய கல்வி நிறுவகம்.**

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம் |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல் |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும். |
| தகவல் தொழினுட்பத் தகைமை: | கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்தவாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல். |

## 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

## 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல் : தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

## 5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில்

ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

## 6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

## 7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை **முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.**

மேற்குறிப்பிட்ட தேசிய கல்விக் குறிக்கோள்களும், அடிப்படைத் தேர்ச்சிகளும் இலங்கையின் கல்வி தொடர்பாக தேசிய கொள்கைகள், மற்றும் பிரேரணைகளை உள்ளடங்கிய தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2003 ஆம் ஆண்டு மார்கழி மாத அறிக்கையிலிருந்து பெறப்பட்டதாகும்.

## பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. இறைவனே படைப்பிற்கெல்லாம் மூலகாரணம் என்பதை விசுவாசித்து அவர் எமக்கு அளித்துள்ள அருள்கொடைகளைப் பயன்படுத்தி பாதுகாக்கவும் அபிவிருத்தி செய்வதற்குமாகச் செயற்படுவர்.

2. கிறிஸ்துவின் அளவற்ற அன்பை அனுபவித்து சமூகம் ஒளிபெறுவதற்காகச் செயற்படுவர்.

3. தூய ஆவியானவரின் வழிநடத்தலால் தமது திறன்கள், ஆற்றல்கள் என்பனவற்றை நல்லதொரு சமூகப் பணிக்காக மற்றும் தேசிய அபிவிருத்திக்கு ஈடுபடுத்துவதற்காகச் செயற்படுவர்.

4. தேசிய மற்றும் பல்சமய நல்லுறவை வளர்த்து ஒழுக்கம் நிறைந்த சமூகத்தை உருவாக்குவதற்கு இறையரசின் விழுமியங்களை உறுதுணையாகக் கொள்வர்.

5. நபர்களின் உடல், உள, நல வளங்களுக்கு மனித நேயத்தை மதிப்பதன் அடிப்படையிலான சிறந்த வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்வதற்கு இறைவார்த்தையை இணைத்துக் கொள்வர்.

6. சிறப்பான கிறிஸ்தவ வாழ்வின் செயற்பாடுகளுக்கூடாக கிறிஸ்துவுக்கு சான்று பகர்வர்.

## வகுப்பிற்குரிய தேர்ச்சிகள்

1. இறைவனே படைப்பிற்கெல்லாம் மூலகாரணம் என விசுவாசிப்பர்.

2. ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்.

3. தூய ஆவியானவரால் துணிவும் சக்தியும் பெற்று புதுவாழ்வின் அனுபவத்தைப் பெறுவர்.

4. இறையரசின் விழுமியங்களைக் கடைப்பிடித்து ஒழுக்காற்றல் நிறைந்த சமூகத்தை உருவாக்க பங்களிப்பு வழங்குவர்.

5. திருவிவிலியத்தை வாழ்விற்கு வழிகாட்டியாகக் கொள்வர்.

# கிறிஸ்தவம் தரம் 11
## பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 1.0 இறைவனே படைப்பிற்கெல்லாம் மூலகாரணம் என விசுவாசிப்பர். | 1.1. யூத சமூக நோக்கு பற்றி ஆழமாக கற்பர். | • யூத சமூகம். (தொ.நூ. 12:2-3, 13:14-17, 18:1-15, எசா 19:25, தொ.நூ 21:1-8, எசா 45:1-4, வி.ப. 20:, எரேமியா29:5-7, இ.ச. 7:6-8, லேவியர் 25:) | ● யூத சமூக நோக்கு தொடர்பான கருத்துக்களைச் சேகரிப்பர்.<br>● ஆபிரகாமை போன்று இறையழைப்புக்கு பதிலளிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கப்பூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்.<br>● நல்ல கிறிஸ்தவ தாற்பரியங்களை விருத்தி செய்துகொள்வர்.<br>● பத்துக் கட்டளைகளுக்கேற்ப நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பச் செயற்படுவர். | 2 |
| | 1.2. மெசியாவால் முழுமை வாழ்வு பெறுவர். | • மெசியா எனும் எண்ணக்கரு (எசாயா 9:1-7, எசாயா 11:1-9) | ● மெசியா பற்றிய எண்ணக்கரு தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.<br>● மெசியா அமைதியின் அரசர் என ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கப்பூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.<br>● மெசியாவால் வாழ்வுக்கு ஒளியூட்டப்படுவதை அனுபவிப்பர்.<br>● நீதி, நேர்மைக்காக ஒன்றாக அர்ப்பணிப்பர். | 2 |
| | 1.3. நல்லாயனின் பண்புகளைக் கடைப்பிடிப்பர். | • ஆயத்துவம் (எசேக்கியேல் 34:, திருப்பாடல் 23, யோவான் 10: 7-19) | ● நல்லாயனின் பண்புகள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பர்.<br>● இறைவன் எமது ஆயன் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கபூர்வமான கடிதமொன்றை முன்வைப்பர்.<br>● நல்லாயனின் பண்புகளைக் கடைப்பிடிப்பர்.<br>● அனைவருடனும் இணைந்து ஆயத்துவ பணிக்காகப் பங்களிப்பு வழங்குவர். | 2 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 1.4. பணியாளனாக துன்புறுதலை பயமின்றி எதிர்நோக்குவர். | • துன்புறும் பணியாளர் (யோபு 1, எரேமியா38:) (எசா 52:13 எசா 53:12, 2:1-4) | ● துன்பங்களுக்கு முகங்கொடுத்த பணியாளன் பற்றிய தகவல்களைச் சேகரிப்பர்.<br>● திருப்பணியின்போது துன்பங்களுக்கு முகங்கொடுக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● துன்பங்களுக்கு மத்தியில் துணிவுடன் பயணித்தல் தொடர்பாக ஆக்கப்பூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்.<br>● துன்பங்களைத் துணிவுடன் எதிர்கொள்ளுவர்.<br>● இறை பணியில் பின் நிற்காது ஒன்றிணைந்து செயற்படுவர். | 2 |
| 2.0 ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்.<br>. | 2.1. கிறிஸ்தவ அன்பின் அடிப்படையில் வாழ்வைக் கட்டியெழுப்புவர். | • அன்பு (1கொரி.13:, பிலிப்பியர் 2:1-2 இஎபேசியர் 3:17-19, மாற் 12:29-33) | ● கிறிஸ்தவ அன்பு பற்றிய தகவல்களைச் சேகரிப்பர்.<br>● அன்பு கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளம் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கப்பூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.<br>● அனைவருக்கும் அன்பு காட்டுவர்.<br>● அன்பை முன்மாதியாகக் கொண்டு ஒன்றிணைந்து வாழ்வர். | 2 |
| | 2.2. நீதி நிறைந்த சமாதான வாழ்வில் ஆர்வம் காட்டுவர். | • சமாதானம் (மத் 5:9-12, எசாயா 9:6-7) | ● சமாதானத்திற்காக அர்ப்பணித்தல் பற்றிய கருத்துக்களை தேடுவர்.<br>● நீதியின் ஊடாக சமாதானம் உருவாகின்றது என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>● நீதி, சமாதானம் பற்றிய கருத்துக்களை வரிசைப்படுத்துவர்<br>.● சமாதானத்தை உருவாக்குவதறகாகச் செயற்படுவர்.<br>● அநீதிக்கு எதிராக இணைந்து செயற்படுவர். | 1 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 2.3. கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றிமன்னிப்பு வழங்குவர். | • மன்னிப்பு<br>(மத் 6:12, மத்18:21-36/ எபேசியர் 4:32) | ● மன்னித்தல் பற்றிய தகவல்களைச் சேகரிப்பர்.<br>● மன்னிப்பளித்தல் அவசியம் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>● நாடகப் பிரதியை ஆக்கப்பூர்வமாக முன்வைப்பர்.<br>● மன்னிப்பளித்தல் இறைபண்பு என்பதை விசுவாசிப்பர்.<br>● ஒருவரை ஒருவர் மன்னித்து வாழ்வர். | 2 |
| | 2.4. வேறுபாடுகளில் ஒருமைப்பாட்டைக் காண்பர். | • ஒருமைப்பாடு<br>(யோவா 15:1-16, 17:20-23, கலா 3:28-29, எபே2:14-16, 4:16) | ● வேறுபாடுகளில் ஒருமைப்பாட்டுடன் செயற்படுதலுக்கான தகவல்களைச் சேகரிப்பர்.<br>● வேறுபாடுகளில் ஒருமைப்பாட்டுடன் செயற்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளில் முன்வைப்பர்.<br>● திருச்சபை ஒன்றிப்புக்காக மன்றாடுவர்.<br>● திருச்சபை ஒன்றிப்புக்காக செயற்படுவர். | 2 |
| | 2.5. இயேசுவில் நிலைவாழ்வின் எதிர்பார்ப்பை உறுதிப்படுத்துவர். | • எதிர்பார்ப்பும் நிலையான வாழ்வும் பிலிப்பியர் 3:7-11, உரோ. 5:1-6, 1பேதுரு1:13-21 | ● நித்திய வாழ்வுக்கான தகவல்களைச் சேகரிப்பர்.<br>● கிறிஸ்துவில் வைத்துள்ள நம்பிக்கையால் நித்திய வாழ்வு கிடைக்கும் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.<br>● இறைவனுக்கு அஞ்சி வாழ்வர்.<br>● நித்தியவாழ்வு தொடர்பாகப் பிறருக்குக் கூறுவர். | 2 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 3.0 தூய ஆவியானவரால் துணிவு பெற்று புதுவாழ்வின் அனுபவத்தைப் பெறுவர். | 3.1. முதல் கிறிஸ்தவ சபையின் விழுமியங்களை முன்மாதிரியாகக் கொள்வர். | • ஆரம்ப கிறிஸ்தவ சபை (தி. ப. 2:1-3, 2:37-47, 4:32-37, 5:12-16, 6:1-7) | • முதல் கிறிஸ்தவ சபையின் பெறுமதிகளின் தகவல்களைச் சேகரிப்பர்.<br>• இறைவார்த்தையைப் போதிப்பதில் ஈடுபட வேண்டும்.<br>• ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.<br>• சமூக பணிகளில் ஆர்வம் காட்ட வேண்டும்.<br>• இணைந்து இறைவனை துதிப்பர். | 2 |
| | 3.2. கிறிஸ்துவுக்காக கனிதரும் பணிக்குத் தம்மை ஒப்புவிப்பர். | • பேதுருவின் பணி (தி.ப. 2:14-36, 3:1-10, 4:12- 23, 10:1-33, 12:1-19) | • பேதுருவின் பணிகளின் தகவல்களை சேகரிப்பர்.<br>• கிறிஸ்துவுக்காக கனிதரும் பணிகளில் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.<br>• பணிகளின் சவால்களுக்கு துணிவுடன் முகம் கொடுப்பர்.<br>• பல்வேறு சமூக பணிகளில் ஈடுபடுவர். | 2 |
| | 3.3. பவுலின் மனமாற்றத்தை ஏற்று வாழ்வர். | • பவுலின் பின்னணியும் மனமாற்றமும் (தி.ப. 7:57-60, 8:1-3, 9:, 22:3-5, 27, 23:6) | • பவுலின் வாழ்வின் பின்னணி மற்றும் மனமாற்றம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.<br>• கிறிஸ்துவில் வாழ்வின் உருமாற்றத்தை அறிய முடியும் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.<br>• கிறிஸ்துவின் வாழ்வின் மாற்றத்தை அனுபவத்தில் காண்பர்.<br>• நண்பர்களுக்காக இறைவனிடம் மன்றாடுவர். | 2 |
| | 3.4. கூட்டு தலைமைத்துவத்தை நாடுவர். | • திருத்தூதுரைப் பயணம் -1 (தி.ப.12:, 13:, 14: ,15:1-35) | • பவுல் 1ஆம் திருத்தூதுரைப் பயணத்தில் சென்ற இடங்கள், நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுவர்.<br>• கூட்டுத் தலைமைத்துவம் சிறந்தது என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர். | 3 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | | | ● நற்செய்திப் பணிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவர்.<br>● பிறருடன் இணைந்து பணி செய்வர். | |
| | 3.5. பின்னடையாது துணிவுடன் பணிசெய்வர். | • திருத்தூதுரைப் பயணம் 11.<br>(தி.ப. 15:36-41, 16:, 17:, 18:1-23) | ● பவுல் 2ஆம் திருத்தூதுரைப் பயணத்தில் சென்ற இடங்கள், நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுவர்.<br>● பின்னடையாது வீரத்துடன் பணிசெய்ய வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.<br>● இடத்துக்கு ஏற்றவாறு ஞானத்துடன் செயற்பட வேண்டும்.<br>● சவால்களின் மத்தியில் பின்னடையாது பணி செய்வர். | 3 |
| | 3.6. பணியின் சவால்களுக்கு சந்தர்ப்பத்துக் கேற்றவாறு மாறுத்தரம் காட்டுவர். | • எபேசுவும் அதனை சூழ்ந்த நகரமும் (தி.ப.18:24 - 21:19) | ● பவுல் எபேசுவை சூழ்ந்த நகரங்களில் செய்த பணிகளின் தகவல்களைச் சேகரிப்பர்.<br>● பணியில் ஏற்படும் சவால்களை வெற்றிகொள்ள வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.<br>● நற்செய்தி பணியின் சவால்களில் வெறறி காண்பர்.<br>● நற்செய்தியைப் பிறருடன் பகிர்ந்து கொள்வர். | 3 |
| | 3.7. துணிவுடன் சத்தியத்துக்கு சான்று பகர்வர். | • உரோமைய பயணம் தி.ப. 27:, 28: | ● பவுலின் உரோமைய பயணம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.<br>● துணிவுடன் சத்தியத்திற்கு சான்று பகர வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.<br>● நாடக பிரதியொன்றை தயாரிப்பர்.<br>● தூதுப்பணிக்கான அழைப்பு உள்ளதென அறிந்து கொள்வர்.<br>● துணிவுடன் சான்று பகர்ந்து கிறிஸ்துவை பிறருக்கு அறிவிப்பர். | 3 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 4.0 இறை யரசின் விழுமியங்களைக் கடைப்பிடித்து ஒழுக்கம் நிறைந்த சமூகத்தைக் கட்டியெழுப்பு வதில் பங்களிப்பு வழங்குவர். | 4.1. கிறிஸ்துவின் அன்பின் ஒளியினால் தனது வாழ்வைப் பிரகாசிக்க செய்வர். | • கிறிஸ்துவும் நானும் (பிலி 2:5, யோவான் 3:1-15, 4:7-10) | ● நிக்கோதேமுவும் சமாரிய பெண்ணும் இயேசுவின் அன்பை அனுபவித்த முறை தொடர்பான கருத்துக்களை சேகரிப்பர்.<br>● கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் எமது வாழ்வு ஒளி பெறும் என ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கப்பூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்.<br>● கிறிஸ்துவில் காணப்பட்ட பண்புகளைப் பின்பற்றுவர்.<br>● அனைவரோடும் அன்போடு வாழ்வர். | 2 |
| | 4.2 கிறிஸ்துவின் ஆழமான உறவை ஏற்படுத்தி குடும்பம் மற்றும் சமூகத்தைக கட்டியெழுப்ப ஒத்துழைப்பர். | • கிறிஸ்துவுக்குள் குடும்பம் (தொ.நூ. 2:18-24, கொலோ. 3:18-21, எபேசியர், 5:21- 6:4) கிறிஸ்துவுக்குள் சமூகம் (கொலோ 3:12-17, மத் 25:31-46 தீத்து 3:1-2 யாக் 2:1-4, சபையுரையாளர் 5:8) | ● கிறிஸ்தவ குடும்பம், சமூகத்தின் பொறுப்பு தொடர்பான கருத்துக்களை சேகரிப்பர்.<br>● இறை அச்சத்தோடு செயற்பட வேண்டும் என ஏற்றுக் கொள்வர்.<br>● ஆக்கப்பூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்.<br>● பெற்றோருக்கு கீழ்ப்படிவர்.<br>● பிறரின் தேவைகளில் உதவுவர். | 2 |
| | 4.3. சமூகத்தில் அனைவரோடும் சகவாழ்வு வாழ்வர். | • சமூக நல்லுறவு (எபே 4:6-16, 2கொரி 6:4 - 7:1) | ● சகவாழ்வுடன் வாழுதல் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.<br>● உண்மையை பேச வேண்டும் என ஏற்றுக் கொள்வர்.<br>● ஆக்கப்பூர்வமான உரையொன்றை முன்வைப்பர்.<br>● நல்லசமூக உறவை வளர்க்கப் பங்களிப்பு வழங்குவர்.<br>● அனைவரோடும் சகவாழ்வு வாழ்வர். | 2 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 4.4. இறைவழி காட்டலுடன் நல்வாழ்வுக்கு பழக்கப்படுவர். | • தீமையானவற்றுக்கு அடிமையாகாமலிருத்தல் (உரோ.12:1, நீ.மொ. 23:29-35, எபே 4:25, கலா 5:16-21) | ● நல்வாழ்வுக்கு பழக்கப்படுத்திக்கொள்ளும் முறை தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.<br>● தூய ஆவியானவரின் வழிகாட்டலோடு செயற்பட வேண்டும் என ஏற்றுக் கொள்வர்.<br>● ஆக்கப்பூர்வமான சுவரொட்டியொன்றை முன்வைப்பர்.<br>● ஊனியல்பின் இச்சையை விட்டுவிடுவர்.<br>● சமூகத்தில் நன்மையை நிலைநாட்டுவதில் ஈடுபடுவர். | 2 |
| | 4.5. வறுமை ஒழிப்புக்கு கைகொடுத்து உதவுவர். | • வறுமை - லூக்கா18:18-36, (மத் 6:11, 6:19-21, 22:13, நீ.மொ. 26:13-15, 6:6-11, தி.ப 6:1 2கொரி. 8:1- 5, லூக் 16:19-35) | ● வறுமை தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.<br>● வறுமை ஒழிப்புக்கு கைகொடுக்க வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கப்பூர்வமான செயற்பாட்டினை முன்வைப்பர்.<br>● சுறுசுறுப்புடன் செயற்படுவர்.<br>● ஒவ்வொருவரின் தேவைகளையும் நிறைவேற்றுவதில் ஈடுபடுவர். | 3 |
| | 4.6. அல்லல்படுவோரின் விடுதலைக்காக உழைப்பர் | • இன்னல்களும் துன்பங்களும்(வி.ப. 2:23-25, 3:9, லூக் 4:18, யோவா3:16) | ● இன்னல்கள், துன்பங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.<br>● துன்பப்படுகின்ற மக்கள் ஆறுதல் பெற வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கப்பூர்வமான செயற்பாட்டினை முன்வைப்பர்.<br>● இன்னல்களைத் தகர்த்தெறிய செயற்படுவர்.<br>● துன்பப்படுகின்ற மக்கள் ஆறுதலடைய ஒன்றிணைந்து செயற்படுவர். | 3 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 5.0 திருவிவிலியத்தை வாழ்வுடன் கைகோர்த்து கொள்வர். | 5.1. நீதியுடன் கூடிய வாழ்வு வாழ்வர். | • ஆமோஸ் - நீதி (ஆமோஸ் 4: 5:) | ● ஆமோஸ் முன்வைத்த நீதி, நேர்மை தொடர்பான இறைசெய்திக்கு பொருத்தமான கருத்துக்களைச் சேகரிப்பர்.<br>● நீதியாக வாழ வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.<br>● விவாதத்தை முன்வைப்பர்.<br>● நீதியுடன் கூடிய வாழ்வு வாழ்வர்.<br>● நீதிக்காக பிறருடன் இணைந்து குரல் கொடுப்பர். | 2 |
| | 5.2. புனிதவாழ்வுக்கு இறைவழிகாட்டுதலை பெறுவர். | • எசாயா: தூய்மை (எசாயா 6:) | ● எசாயாவின் அழைப்பு, பணி குறித்த தகவல்களை சேகரிப்பர்.<br>● புனித வாழ்வு வாழ வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கபூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்.<br>● பாவங்களிலிருந்து மனந்திரும்புவர்.<br>● புனித வாழ்வு வாழ்வதன் முக்கியத்துவத்தை பிறருக்கு அறிவிப்பர். | 2 |
| | 5.3. சமாதானத்தை உருவாக்க பங்களிப்பு வழங்குவர். | • மீக்கா - சமாதானம் (மீக்கா 4:) | ● இறைவாக்கினர் மீக்காவின் சமாதானத்தின் செய்தி பற்றிய கருத்துக்களை சேகரிப்பர்.<br>● சமாதானத்தோடு வாழ வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● சுவரொட்டியொன்றை ஆக்கபூர்வமாக முன்வைப்பர்.<br>● சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக செயற்படுவர்.<br>● ஒற்றுமையான உலகை கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைந்து பங்களிப்பு வழங்குவர். | 2 |

# கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்

**தேர்ச்சி 1:0** : இறைவனே படைப்பிற்கெல்லாம் மூல காரணம் என விசுவாசிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : யூத சமூக நோக்கு பற்றி ஆழமாக கற்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- யூத சமூக நோக்கு தொடர்பான கருத்துக்களைச் சேகரிப்பர்.
- ஆபிரகாமைப் போன்று இறையழைப்புக்குப் பதிலளிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கப்பூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்.
- நல்ல கிறிஸ்தவ தாற்பரியங்களை விருத்தி செய்துகொள்வர்.
- பத்து கட்டளைகளுக்கேற்ப நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பச் செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- ‘சமூக நோக்கு’ எனும் தலைப்பைப் பலகையில் எழுதி மாணவரது கருத்துக்களை கேளுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - ஒவ்வொரு சமூகத்தினருக்கும் தனித்துவமான சமூக நோக்குகள் உள்ளன.
  - யூத சமூக நோக்கைக் கட்டியெழுப்ப ஆபிரகாம் மூலகாரணமாக இருந்தார்.
  - பத்து கட்டளைகளும் யூத சமூக நோக்கை வளப்படுத்தியது.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாகப் பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கிக் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)

(45 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கி பின்வரும் விடயங்களை கருத்திற்கொண்டு கற்ற பாடத்தைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துக.

  - யூத சமூக நோக்கின் உன்னதர் இறைவன்.
  - யூத சமூகத்திலும் நல்ல விழுமியங்கள் காணப்பட்டது.
  - ஆபிரகாமின் அழைப்போடு இஸ்ராயேல் மக்களின் வரலாறு ஆரம்பிக்கின்றது.
- இறை உறவுடன் சமூக நோக்கு வளப்படுத்தப்பட்டது.
  - இஸ்ராயேலர் மற்றவர்களுக்கு ஆசியாக விளங்கியமை யூத சமூக நோக்கில் எடுத்துக் காட்டப்படுகிறது. (எசாயா 19 :25, 7: 6-8)
  - பத்து கட்டளைகள் மூலமாக நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும். ( இ.ச 20, லேவி 25)
  - கிறிஸ்தவ விழுமியங்கள் மூலம் சமூகம் வளப்படுத்தப்பட வேண்டும்.
  - இறை உறவை மையப்படுத்தி சமூக நோக்கைக் கட்டியெழுப்பல்.

(20 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (தொ.நூ 12: 2-3, 18: 1-15, இ.ச 7: 6-8, லேவி 25:, எசாயா 19: 25, 45: 1-4, வி.ப 20, எரே 29: 5-7)
- A4 தாள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப் பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

குழு 1 - பின்வரும் திருவிவிலிய பகுதிகளை வாசித்து அதைக்கொண்டு 'ஆபிரகாமின் அழைப்பு மற்றும் பத்து கட்டளைகளால் வளம் பெற்ற சமூக நோக்கு' எனும் தலைப்பில் கட்டுரையொன்றை எழுதுக.

தொ.நூ 12: 2-3, 18: 1-15, வி.ப 20:)

குழு 2 - பின்வரும் திருவிவிலிய பகுதிகளை வாசித்து அதைக்கொண்டு 'யூத சமூக நோக்கில் உருவாகிய சமூக விழுமியங்கள்' எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

லேவி 25:, எசாயா 19: 25:, 45: 1-4, எரேமியா 29: 5-7, இ.ச 7: 6-8

- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.

**வீட்டுச் சூழல் :**

பத்து கட்டளைகளை மனனம் செய்து செயற்படுத்துவதற்குப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 1:0** : இறைவனே படைப்பிற்கெல்லாம் மூல காரணம் என விசுவாசிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : மெசியாவால் முழுமை வாழ்வு பெறுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- மெசியா பற்றிய எண்ணக்கரு தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.
- மெசியா அமைதியின் அரசர் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கப்பூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- மெசியாவால் வாழ்வுக்கு ஒளியூட்டப்படுவதை அனுபவிப்பர்.
- நீதி, நேர்மைக்காக ஒன்றாக அர்ப்பணிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- புதிய துளிர்விடும் வேர் ஒன்றைக் காட்சிப்படுத்துங்கள்.
- எசாயா 11:1 பலகையில் எழுதி மாணவர் வாசிப்பதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
  - புதிய தளிரில் புதிய பிறப்பு/ யுகம்/ வளர்ச்சி போன்றவை அடையாளப்படுத்தப்படுகின்றன.
  - யூதர்கள் அடிமைத்தனத்திலிருந்த போது அப்பயணத்தின் முடிவை எதிர்ப்பார்த்தனர்.
  - தாவீதின் அரசு துளிர் விடும் மரத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது.
  - விடுதலையைக் கட்டளையிடும் ஒரு அரசர் தோன்றுவார்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை பொருத்தமான முறையில் சிறு குழுக்களாகப் பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளைவழங்கி குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)

(45 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கி பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு கற்ற பாடத்தைச் சுருக்கமாக தெளிவுபடுத்துக.
  - மெசியா பற்றிய எண்ணக்கருவில் சிறப்புத் தன்மை உண்டு. (எசா 9 : 7)
  - ஆபிரகாமின் உடன்படிக்கைக்கேற்ப மெசியாவை எதிர்ப்பாத்தல். (எசாயா 11 : 1)
  - தாவீதின் வம்சத்திலிருந்து வரும் அரசர் மெசியா.
  - அவர் வியத்தகு ஆலோசகர், அமைதியின் அரசர். (எசாயா 9: 6)
  - காரிருளில் இருந்த மக்கள் பேரொளியை கண்டு முழுமையான வாழ்வை பெற்ற முறை.
  - மெசியாவால் நீதி, நேர்மை எனும் பண்புகள் முழுமை பெறல்.

(20 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்**:

- திருவிவிலியம்- எசாயா 9: 6, 11: 1-9
- துளிர் விடும் வேர்கள்

- A4 தாள்கள், பசை, கத்தரிக்கோள், பிரிஸ்டல் மட்டை, நிறப் பேனைகள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

குழு 1 :
- **எசாயா 9: 1 -7, 11: 1-9** பகுதியை வாசித்து கலந்துரையாடுங்கள்.
- யூதர்கள் எதிர்ப்பார்த்த மெசியாவின் பண்புகளை A4 தாளில் எழுதுங்கள்.

குழு : 2
- **எசாயா 9: 1 -7, 11: 1-9** பகுதியை வாசித்துக் கலந்துரையாடுங்கள்.
- இன்றைய சமூகம் எதிர்ப்பார்க்கின்ற நீதியான அரசு பற்றிய விபரங்களை ஆக்கப்பூர்வமாக தயாரியுங்கள்.
- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.

**வீட்டுச் சூழல் :**

எப்பொழுதும் நீதியோடு வாழ்வதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 1:0** : இறைவனே படைப்பிற்கெல்லாம் மூல காரணம் என விசுவாசிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 11:1.3** : நல்லாயனின் பண்புகளை கடைப்பிடிப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- நல்லாயனின் பண்புகள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பர்.
- இறைவன் எமது ஆயன் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கபூர்வமான கடிதமொன்றை முன்வைப்பர்.
- நல்லாயனின் பண்புகளைக் கடைப்பிடிப்பர்.
- அனைவருடனும் இணைந்து ஆயத்துவ பணிக்காகப் பங்களிப்பு வழங்குவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- சமூகத்தில் சிறந்த தலைவர்களாகச் செயற்பட்டவர்களின் படங்கள் சிலவற்றை காட்சிப்படுத்துங்கள். (இவ்லின் கார்னி, அருட்தந்தை. மைக்கல் ரொட்றிகோ, அதி.வண.என்றூ குமாரகே பேராயர், அதி.வண. கெனத் பர்னாண்டோ பேராயர், நெல்சன் மண்டேலா)
- அவர்களைப் பற்றி மாணவர் அறிந்தவற்றை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
    - அவர்கள் சிறந்த தலைவர்களாகவும் ஆயர்களாகவும் செயற்பட்டனர்.
    - இறைவன் அனைவரதும் ஆயனாக தலைமைத்துவம் வகிக்கின்றார்.
    - ஆயர்கள் குறித்து திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**படிமுறை 2**

- மாணவருக்குப் பொருத்தமான முறையில் தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கிச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு மாணவருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கி பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு கற்ற பாடத்தைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துக.
    - இறைவன் எம் அனைவரதும் ஆயனாக செயற்படுகின்றார். (தி.பா 23: 1)
    - இறைவன் ஆயனாக எம்மை பாதுகாத்து பராமரிக்கின்றார். (எசே 34: 16)
    - புதிய ஏற்பாட்டின் ஆயன் இயேசு (யோவான் 10: 7)
    - இயேசு தனது ஆடுகளைத் தனிப்பட்ட ரீதியாக அறிந்திருக்கிறார். (யோவான் 10: 14)
    - நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காக உயிர் கொடுத்தல் (யோவான் 10: 11)
    - பல்வேறு சந்தர்ப்பங்களில் நாமும் மற்றவர்களுக்கு ஆயராக வழிகாட்டலையும், பாதுகாப்பையும் கொடுக்க வேண்டும்.
    - நாமும் ஆயர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்ற வேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம்- எசே 34: , தி.பா 23, யோவான் 10 : 7-19
- சமூகத்தில் சிறந்த தலைவர்களாகச் செயற்பட்டவர்களின் படங்கள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- எசேக்கியேல் 34: , தி.பா 23, யோவான் 10 : 7 - 9 பகுதிகளை வாசியுங்கள்.
- வாசித்த பகுதியைக் குறித்து தியானம் செய்யுங்கள்.
- இன்றைய சமூகத்தில் ஆயத்துவ பணி தொடர்பாக கடிதமொன்றை எழுதுங்கள்.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு தயாராகுங்கள்.

**வீட்டுச் சூழல் :**

நாளாந்த குடும்ப செபத்தில் திருப்பாடல்கள் 23 ஐ வாசிப்பதற்கு பழக்குங்கள்

**தேர்ச்சி 1:0** : இறைவனே படைப்பிற்கெல்லாம் மூல காரணம் என விசுவாசிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1:4** : பணியாளனாக துன்புறுதலை பயமின்றி எதிர்நோக்குவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- துன்பங்களுக்கு முகங்கொடுத்த பணியாளன் பற்றிய தகவல்களைச் சேகரிப்பர்.
- திருப்பணியின்போது துன்பங்களுக்கு முகங்கொடுக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- துன்பங்களுக்கு மத்தியில் துணிவுடன் பயணித்தல் தொடர்பாக ஆக்கப்பூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்
- துன்பங்களை துணிவுடன் எதிர்கொள்ளுவர்.
- இறை பணியில் பின் நிற்காது ஒன்றிணைந்து செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- சிரிக்கும் முகமொன்றையும் அழுகின்ற முகமொன்றையும் காட்டும் இரு படங்களை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- அதில் வெளிப்படுகின்ற வாழ்கையின் சாதகமான, பாதகமான சந்தர்ப்பங்களை படங்களுக்கு உரிய இடத்தில் எழுதுவதற்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - மனிதர்கள் துன்பங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.
  - மனிதர்கள் அதற்கு பல்வேறு பிரதிபலிப்புகளைக் காட்டுகின்றனர்.
  - அப் பிரதிபலிப்புகளில் சில சாதகமானவை, சில பாதகமானவை.
  - கிறிஸ்தவர்களுக்கும் துன்பங்கள் ஏற்படும்.
  - இயேசு துன்பங்களுக்கு மத்தியில் பணியாற்றினார்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை பொருத்தமான முறையில் சிறு குழுக்களாகப் பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி குழு செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(45 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கி பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு கற்ற பாடத்தைச் சுருக்கமாக தெளிவுபடுத்துக.

  - நேர்மையும் இறையச்சமும் கொண்ட விசுவாசிகள் துன்பங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் (யோபு 1 : 1)
  - இறைவனுக்குள் துன்பப்படுதல் இரகசியத்துக்குரியதாகும்.
  - அனைத்து துன்பங்களிலும் பாவம் செய்வதிலிருந்து விலகியிருத்தல் வேண்டும். (யோபு 1: 22)
  - திருப்பணியாளர்களுக்கும் பணியின்போது துன்பங்கள் ஏற்படுகின்றன.(எரே 38 : 5-6)
  - துன்பங்களுக்கு மத்தியில் பணியாற்ற அழைப்பு கிடைக்கும். (எரே 38: 1-7)
  - துன்புறும் ஊழியன் அனுபவிக்கும் துன்பம் பாரதூரமானது. (எசாயா 53: 1-8)
  - இயேசு துன்புறும் பணியாளன்.

- இயேசு பணியாள் தலைமைத்துவத்தோடு பணியாற்றினார்.
- இயேசு துன்பங்களுக்கு மத்தியிலும் தமது உயிரைக் கொடுப்பது வரை துணிவுடன் பயணித்தார்.
- இயேசுவின் துன்புறுதலால் இறைவன் உலகிற்கு நன்மையை அருளியுள்ளார்.
- கிறிஸ்தவர்களாக, இறை பணியாளர்களாக துன்பங்களுக்கு மத்தியில் துணிவுடன் செயற்பட வேண்டும்.
- கிறிஸ்தவர்கள் முகங்கொடுக்கின்ற துன்பங்களுக்கூடாக வாழ்வுக்கு புதிய உத்வேகம் கிடைத்தல்.

(20 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் - யோபு 1: எரே 38: , எசா 52: 13 - 53: 12, 42: 1-4
- சிரிக்கும், அழுகின்ற முகங்களை காட்டும் படங்கள்
- பேனைகள், மாக்கர் பேனைகள

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1

## ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

குழு 1 -
- யோபு 1: பகுதியை வாசியுங்கள்.
- இறையச்சம் நிறைந்த நேர்மையாளரான யோபு தனக்கு நேர்ந்த துன்பங்களுக்கு காட்டிய பிரதியுத்தரம் பற்றிய கடிமமொன்றை எழுதுங்கள்.

குழு 2
- எரேமியா 38: பகுதியை வாசியுங்கள்.
- 'துன்பங்களுக்குத் தைரியமாக முகங்கொடுத்த இறை பணியாளன் எரேமியா' எனும் தலைப்பில் சமய சஞ்சிகையொன்றுக்குக் கடிதமொன்றை எழுதுங்கள்.

குழு 3
- எசாயா 52: 13 - 53: 12 , 42: 1 -4 பகுதியை வாசியுங்கள்.
- 'துன்புறும் பணியாளனாகிய இயேசுவில் வெளிப்படும் இறையன்பின் மகத்துவம்' எனும் தலைப்பில் கட்டுரையொன்றை எழுதுக.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

துன்பங்களை மகிழ்வுடன் ஏற்பதற்கு பழக்குங்கள்.

**தேர்ச்சி 2:0** : ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 2:1** : கிறிஸ்தவ அன்பின் அடிப்படையில் வாழ்வைக் கட்டியெழுப்புவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- கிறிஸ்தவ அன்பு பற்றிய தகவல்களைச் சேகரிப்பர்.
- அன்பு கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளம் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கப்பூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- அனைவருக்கும் அன்பு காட்டுவர்.
- அன்பை முன்மாதியாகக் கொண்டு ஒன்றிணைந்து வாழ்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- ‘அன்பு’ என பலகையில் எழுதி வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- அன்பு என்ற சொல்லுக்கான பொருள் பற்றி மாணவரின் கருத்துக்களை கேளுங்கள்.
- இணைப்பு 2 இல் உள்ள பாடல் பிரதியை மாணவருக்கு வழங்குங்கள்.
- மாணவருடன் இணைந்து அதனைப் பாடுங்கள்.
- பாடலுக்கேற்ப அன்பு தொடர்பான கருத்துகளைக் கேளுங்கள்.
- பின்வரும் விடயங்களை வழியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
  - **அன்பு** எனும் தியாகம்.
  - **அன்பு** பொறுமையுள்ளது.
  - கோபம் கொள்ளாதவர்களிடம் **அன்பு** உள்ளது.
  - **அன்பு** இரக்கமுள்ளது.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தை வழங்குங்கள்.
- ஆய்வுப் பத்திரத்தை (இணைப்பு 1)ப் பெற்றுக்கொடுங்கள்.
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(40 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு மாணவருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கி பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு கற்ற பாடத்தைச் சுருக்கமாக தெளிவுபடுத்துக.
  - இறையன்பு கிறிஸ்துவில் நிறைவேறியது.
  - அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்.
  - நம்பிக்கை, எதிர்நோக்கு அன்பு என்பன நிலையாய் உள்ளன.
  - இவற்றுள் அன்பே தலை சிறந்தது. (1 கொரி 13: 13)

- இறை வேண்டலின் மூலமாக உறுதியாக அன்பு செலுத்த முடியும். (எபே 3: 17-19)
- ஒருவருக்கொருவர் அன்பாகவும் இரக்கத்துடனும் செயற்படுதல்.
- ஒரே எண்ணத்தோடு ஒரு மனத்தவராயிருப்பதால் அன்பு முழுமையடைகிறது. (பிலி 2 : 1-2)
- எமது முழு உள்ளத்தோடும், அறிவோடும், ஆற்றலோடும் கடவுளாகிய ஆண்டவருக்கு அன்பு செலுத்த வேண்டும்.
- தன்னிடம் அன்புகொள்வது போல அடுத்திருப்பவரிடமும் அன்பு செலுத்த வேண்டும். (மாற் 12: 30-33)

(20 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (1 கொரி 13: , பிலி 2: 1-2, எபே 3: 17 -19, மாற் 12: 29-33)
- A 4 தாள், பேனை, வர்ணங்கள், கத்தரிக்கோல், பசை
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

குழு : 1 கொரி 13 ம் அதிகாரத்தை வாசித்து அன்பு தொடர்பாக குறிப்பிடப்படும் கருத்துக்களை வரிசைப்படுத்துங்கள்.

குழு : 2 பிலி 2:1-2, எபே 3: 17 -19 பகுதியை வாசித்து கிறிஸ்தவ அன்பு பற்றிய உரையாடல்/ பாடல் அல்லது கவிதையொன்றினைத் தயாரியுங்கள்.

குழு : 3 மாற் 12 : 29 -33 பகுதியை வாசித்து அன்பைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள வசனத்தை ஆக்கப்பூர்வமாக அலங்கரிக்கப்பட்ட பலகையில் எழுதி வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.

**இணைப்பு 2**

அன்பே பிரதானம் - சகோதர
அன்பே பிரதானம்

பண்புறு ஞானம் - பரம நம்பிக்கை
இன்ப விஸ்வாசம் இவைகளிலெல்லாம் - அன்பே

பல பல பாஷை - படித்தறிந்தாலும்
கலகல வென்னும் - கைம்மணியாமே – அன்பே

என் பொருள் யாவும் - ஈந்தளித்தாலும்
அன்பில தான – லாம் பயனில்லை – அன்பே

துணிவு டனுடலைச் - சுடக் கொடுத்தாலும்
பணிய அன்பிலாற் பயனில்லை – அன்பே

சாந்தமும் தயவும் - சகல நற்குணமும்
போந்த சத்தியமும் - பொறுமையுள்ள – அன்பே

புகழிறு மாப்பு – பொழிவு பொறாமை
பகையை நியாயப் - பாவமுஞ் செய்யா – அன்பே

சினமடையாது - தீங்கு முன்னாது
தின மழியாது – தீமை செய்யாது – அன்பே

சகலமும் தாங்கும் - சகலமும் நம்பும்
மிகைபட வென்றும் - மேன்மை பெற்றோங்கும் - அன்பே

**வீட்டுச் சூழல்**

பிறரோடு அன்பாக செயற்படுவதற்குப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 2:0** : ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்

**தேர்ச்சி மட்டம் 2.2** : நீதி நிறைந்த சமாதான வாழ்வில் ஆர்வம் காட்டுவர்.

**பாடவேளை** : 01

**கற்றல் பேறுகள்** :

- சமாதானத்திற்காக அர்ப்பணித்தல் பற்றிய கருத்துக்களைத் தேடுவர்.
- நீதியின் ஊடாக சமாதானம் உருவாகின்றது என்பதை ஏற்றுக்கொள்வர்.
- நீதி, சமாதானம் பற்றிய கருத்துக்களை வரிசைப்படுத்துவர்.
- சமாதானத்தை உருவாக்குவதற்குச் செயற்படுவர்.
- அநீதிக்கு எதிராக இணைந்து செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- நீதி சீர்குலைந்த நிலைமைகளைக் காட்டும் பத்திரிகையின் படங்கள் மற்றும் தலைப்புச் செய்திகள் சிலவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர் அதனை அவதானித்து அறிவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
    - நீதியற்ற இடத்தில் சதாதானம் சீர்குலையும்.
    - பிரச்சினைகள் இல்லாதபோது சமாதானம் உருவாகிறது.
    - மற்றவருக்கு செவிகொடுத்தல், பொறுமை என்பவற்றினூடாக சமாதானம் கட்டியெழுப்பப்படுகிறது.
    - ஒற்றுமையாக வாழும்போது சமாதானம் நிலைத்தோங்கும்.

(5 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவருக்குப் பொருத்தமான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கிச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவருக்குத் தமது செயற்பாடுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கி பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு கற்ற பாடத்தைச் சுருக்கமாக தெளிவுபடுத்துக.
    - எப்போதும் நீதியுடன் செயற்பட வேண்டும்.
    - இதற்கூடாக நீதி தழைத்தோங்கும்.
    - இறை மைந்தனின் அரசில் சமாதானத்திற்கு எல்லையில்லை.
    - நீதியும் நேர்மையும் அரசாளும்.
    - நீதியை நிலைநாட்ட துன்பங்களை எதிர்நோக்க வேண்டும்.
    - நீதியுள்ள இடத்தில் சமாதானம் நிலைநிற்கும்.

(20 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (மத் 5: 9 - 12, எசா 9: 6-7)
- A 4 தாள், பேனை
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1
## ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

**செயற்பாடு :**

1 மத் 5 : 9-12 ஐ வாசித்து நீதி மற்றும் சமாதானம் பற்றிய கருத்துக்களை வெவ்வேறாக எழுதுங்கள்.

2 எசாயா 9: 6-7 ஐ வாசித்து அமைதியின் அரசர் பற்றிய கருத்துகளைச் சுருக்கமான முறையில் வரிசைப்படுத்துங்கள்.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

எப்பொழுதும் ஒற்றுமையுடன் வாழ்வதற்குப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 2:0** : ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்

**தேர்ச்சி மட்டம் 2.3** : கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி மன்னிப்பு வழங்குவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- மன்னித்தல் பற்றிய தகவல்களைச் சேகரிப்பர்.
- மன்னிப்பளித்தல் அவசியம் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- நாடகப் பிரதியை ஆக்கப்பூர்வமாக முன்வைப்பர்.
- மன்னிப்பளித்தல் இறைபண்பு என்பதை விசுவாசிப்பர்.
- ஒருவரை ஒருவர் மன்னித்து வாழ்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- முன் ஆயத்தம் செய்த இணைப்பு 2 உரையாடலை வகுப்பில் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
  - கோபம் ஏற்படும் போது தவறிழைத்தல்.
  - நாம் மன்னிப்பைப் பெற வேண்டும்.
  - நாம் பிறரை மன்னிக்க வேண்டும்.
  - மன்னிப்பு வழங்கி மன்னிப்பைப் பெற வேண்டும்.
  - நாம் எப்போதும் அன்புடன் செயற்பட வேண்டும்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை பொருத்தமான முறையில் சிறு குழுக்களாகப் பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கிக் குழு செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கி பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு கற்ற பாடத்தைச் சுருக்கமாகத் தெளிவுப்படுத்துக.
  - எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரை நாம் மன்னித்துள்ளது போல எமது குற்றங்களுக்கும் மன்னிப்பு வேண்டுதல்.
  - மன்னிப்பளித்தலில் எல்லையில்லை.
  - முழு மனதோடும் மன்னிப்பளித்தல் வேண்டும்.
  - இரக்கத்துடன் மன்னிப்பு வழங்குதல்.
  - மன்னிப்பு குறித்த இயேசுவின் போதனைகள்.
  - இயேசுவின் போதனைகளைப் பின்பற்றி மன்னிப்பு வழங்கப் பழக்கப்பட வேண்டும்.
  - மன்னிப்பு வழங்குவதால் மகிழ்வு, மன ஆறுதல், மனநிறைவு ஏற்படும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் ( மத் 6: 12, எபே 4: 32, மத் 18: 21- 35)
- **A4** தாள், பேனை
- இணைப்பு 1, இணைப்பு 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- மத்தேயு 6: 12, எபே 4: 32, மத் 18:21-26 ஐ வாசித்து கலந்துரையாடுங்கள். ‘மன்னிப்பு வழங்குதல்’ எனும் தலைப்பில் நாடகப் பிரதி தயாரியுங்கள்.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.

**இணைப்பு 2**

**அக்கா:** அம்மா! தம்பி என்னை அடிக்க வருகிறான்.

**தம்பி :** அம்மா! என்ட வேலைகளில் தொந்தரவு கொடுக்க வேண்டாம் என அக்காவிடம் சொல்லுங்கள்.

**அக்கா :** அம்மா! தம்பி செய்த பிழையை கூறியதுதான் நான் செய்த தவறு.

**அம்மா:** போதும். உங்கள் இருவரது வாதங்களும் போதும். நான் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன். நீ செய்த தவறை அக்கா கூறினாள்.

**அக்கா:** அம்மா! தம்பி செய்த தவறை என்னால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. தவறு செய்யும்போது அதனை ஏற்றக்கொள்ள வேண்டும் என ஓய்வுநாட் பாடசாலையில் கற்றோம்.

**அம்மா:** ஆம் மகனே! அக்கா உன்னை விட மூத்தவள். அவள் சரியானதைத்தான் செய்தாள். அக்காவின் மனதை வேதனைப்படுத்தியது தவறு.

**அப்பா:** (நடந்ததை அவதானித்தல்) தவறு செய்யும் போது மன்னிப்பு பெற வேண்டும் என இறை வார்த்தை கூறுகிறது. இயேசு பகைவரையும் மன்னித்தார் என உங்களுக்கு தெரியும் தானே!

**வீட்டுச் சூழல்**

மன்னிப்பு வழங்கி வாழப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 2:0** : ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 2:4** : வேறுபாடுகளில் ஒருமைப்பாட்டைக் காண்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- வேறுபாடுகளில் ஒருமைப்பாட்டுடன் செயற்படுதலுக்கான தகவல்களைச் சேகரிப்பர்.
- வேறுபாடுகளில் ஒருமைப்பாட்டுடன் செயற்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளில் முன்வைப்பர்.
- திருச்சபை ஒன்றிப்புக்காக மன்றாடுவர்.
- திருச்சபை ஒன்றிப்புக்காக செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- மாணவரைப் பொருத்தமான முறையில் அமரச்செய்யுங்கள்.
- முன் ஆயத்தம் செய்த மாணவர்களால் இசைக்கருவியுடன் பாடலைப் பாடுவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
    - இசைக்கருவியுடன் இணைந்து பாடும்போது தாளம் சரியாக அமைய வேண்டும்.
    - இசைக்கருவியால் வெளிப்படும் ஓசை இனிமையானது.
    - ஒன்றிணைந்து செயற்படுவதால் வேறுபாடுகளில் வெற்றி காணலாம்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரைப் பொருத்தமான முறையில் சிறு குழுக்களாக பிரித்துத் தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கிக் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)

(25 epkplq;fs;)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கி பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு கற்ற பாடத்தைச் சுருக்கமாக தெளிவுபடுத்துக.
    - கிறிஸ்துவுக்குள் அனைவரும் இணைந்து வாழ வேண்டும்.
    - கிறிஸ்துவுடன் இணைந்திருத்தல். (யோவான் 15: 1-4)
    - கிறிஸ்துவுக்கள் கனி கொடுத்தல். (யோவான் 15: 5 -7)
    - அனைவரும் ஒன்றித்து வாழ்வதற்கான மன்றாடல்.
    - அனைவரும் பேதமின்றி இணைந்து வாழ்தல். (கலா 3: 28 - 29, எபே 2: 14- 16)
    - உடலாகிய திருச்சபையின் தலை கிறிஸ்து.

- உடலின் அவயவங்களான நாம் இணைந்து செற்பட வேண்டும்.
- நாம் பேதமின்றி இணைந்து செயற்பட வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (யோவான் 15: 1-16, 17: 20- 23, கலா 3: 28-29, எபே 2: 14 -16)
- A 4 தாள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

குழு : 1 யோவான் 15: 1-16 பகுதியை வாசித்து 'வேறுபாடுகளில் ஒருமைப்பாடு' என்ற தலைப்பில் சுவரொட்டி தயாரியுங்கள்.

குழு : 2 யோவான் 17: 20 -23, கலா 3: 28-29 பகுதியை வாசித்து 'வேறுபாடுகளில் ஒருமைப்பாட்டுடன் செயற்படுதல்' அறிக்கை தயாரியுங்கள்.

குழு : 3 எபே 2: 14-16, 4: 16 பகுதியை வாசித்து 'வேறுபாடுகளில் ஒருமைப்பாட்டுடன் வாழ்வோம் என்ற தலைப்பில் கிறிஸ்தவ சஞ்சிகைக்கு கடிதம் வரைக.

- உங்களது ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

**வீட்டுச் சூழல்**

ஒருமைப்பாட்டுடன் வாழ பழக்குங்கள்.

**தேர்ச்சி 2:0** : ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்

**தேர்ச்சி மட்டம் 2:5** : இயேசுவில் நிலைவாழ்வின் எதிர்பார்ப்பை உறுதிப்படுத்துவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள்** :

- நித்திய வாழ்வுக்கான தகவல்களைச் சேகரிப்பர்.
- கிறிஸ்துவில் வைத்துள்ள நம்பிக்கையால் நித்திய வாழ்வு கிடைக்கும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- இறைவனுக்கு அஞ்சி வாழ்வர்.
- நித்தியவாழ்வு தொடர்பாக பிறருக்கு கூறுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2 ஐ மாணவரிடம் கொடுத்து பாடலைப் பாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - பாடலில் நித்தியவாழ்வைக் குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது.
  - இயேசு சிலுவையில் அறையப்படுதல் மற்றும் இயேசுவின் உயிர்ப்பு என்பன கிறிஸ்தவ வாழ்வின் சிகரமாகும்.
  - நித்தியவாழ்வைப் பெற்றுக்கொள்ள நம்பிக்கை அவசியம்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாக பிரித்து இணைப்பு 1 ஐயும் தரவிருத்தி உள்ளீடுகளையும் வழங்கிச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(45 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவரின் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு கற்ற பாடத்தைச் சுருக்கமாக தெளிவுபடுத்துக.

  - கிறிஸ்துவுடன் கிட்டிய தொடர்பு கொள்ள வேண்டும். (பிலிப்பியர் 3:7)
  - இயேசுவின் சிலுவை தியாகபலியின் நம்பிக்கையால் நித்தியவாழ்வு உரித்தாகும். (பிலிப்பியர் 3:7)
  - எதிர்காலத்தில் கிடைக்கும் இறைவரப்பிரசாதத்துக்காக மகிழ்ச்சி அடைய வேண்டும். (உரோமையர் 5:2)
  - துன்பங்களின் மத்தியில் நம்பிக்கையுடன் வாழ தூயாவியானவரின் வழியால் கடவுளின் அன்பு எமக்கு வழங்கப்படுகின்றது. (உரோமையர் 5:5)
  - நிலைவாழ்வைப் பெற இறைவனுக்கு அஞ்சி வாழ வேண்டும் (1 பேதுரு 1:14-17)
  - இயேசுவின் சிலுவை மரணம் மட்டுமே நிலைவாழ்வின் வழியை திறக்கின்றது. (1 பேதுரு 1:18-19)

- இயேசு கிறிஸ்துவுக்குள் தூய்மையுள்ள நடத்தை உள்ளவர்களாய் வாழவேண்டும்.
- நிலைவாழ்வின் எதிர்பார்ப்பு எம்மில் காணப்பட வேண்டும்.
- நிலைவாழ்வின் எதிர்பார்ப்பைப் பிறருக்குக் கூறவேண்டும்.

(20 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் - பிலிப்பியர் 3:7-11, உரோமையர், 5:1-6 1பேதுரு 1:13-21
- A 4 தாள், பேனைகள்
- இணைப்பு 1,2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- பிலிப்பியர் 3:7-11, உரோமர் 5:1-6, 1 பேதுரு 1:13-21 வாசியுங்கள்.
- கருத்துக்களைக் கலந்துரையாடுங்கள்.
- நிலைவாழ்வைப் பெறுவதற்காக திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கிறிஸ்தவ மாணவனிடம் காணப்படவேண்டிய பண்புகளைப் பட்டியல் படுத்துங்கள்.
- கிறிஸ்துவுடன் கிட்டிய உறவு வைப்பதற்காக உமது அனுபவங்களை எழுதுங்கள்.
- உங்களது ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்

**இணைப்பு 2**

இதோ மனுஷரின் மத்தியில் தேவாதி தேவன்
வாசஞ் செய்கிறாரே

தேவன் தாபரிக்கும் தலமே
தம் ஜமத்தாரின் மத்தியிலாம்
தேவன் தாம் அவர்கள் தேவனாயிருந்தே
கண்ணீர் யாவையும் துடைக்கிறாரே

தேவ ஆறுதலும் அவரே
தூய ஒளிவிளக்கும் அவரே
ஜீவனாலே தம் ஜனங்களின் தாகந் தீர்க்கும்
சுத்த ஜீவ நதியும் அவரே - இதோ

முன்னோடியாய் இயேசுபரன்
மூலைக்கல்லாகி சீயோனிலே
வாசஞ் செய்திடும் உன்னத சிகரமதை
வாஞ்சையோடு நாம் நாடிடுவோம் - இதோ

**வீட்டுச் சூழல்**

கடவுளுக்கு அஞ்சி வாழ வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 3:0** : தூய ஆவியானவரால் துணிவு பெற்று புதுவாழ்வின் அனுபவத்தைப் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 11:3:1:** முதல் கிறிஸ்தவ சபையின் விழுமியங்களை முன்மாதிரியாகக் கொள்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- முதல் கிறிஸ்தவ சபையின் பெறுமதிகளின் தகவல்களை சேகரிப்பர்.
- இறைவார்த்தையை போதிப்பதில் ஈடுபட வேண்டும்.
- ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- சமூக பணிகளில் ஆர்வம் காட்ட வேண்டும்.
- இணைந்து இறைவனைத் துதிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- மாணவர் தமது திருஅவைகளை அறிமுகம் செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- **பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.**
  - கிறிஸ்தவ மதத்தவர் ஒன்றுசேரும் இடம் திருஅவையாகும்.
  - கிறிஸ்தவ திருஅவைகளால் உலகுக்கு மகத்தான பணிகள் செய்யப்படுகின்றன.
  - ஒரே கடவுளை பல திருஅவை மக்களும் வழிபடுகின்றனர்
  - திரு அவைகளின் ஊடாக கிறிஸ்து உலகுக்கு வெளிப்படுகின்றார்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாகப் பிரித்து இணைப்பு 1 ஐயும் தரவிருத்தி உள்ளீடுகளையும் வழங்கிச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(25 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- **ஒவ்வொரு மாணவரும் தமது செயற்பாடுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கி பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு கற்ற பாடத்தைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துக.**
  - முதல் திருச்சபை மக்கள் தூயாவியைப் பெற்று ஒரே மனதுடன் வாழ்ந்தனர். (தி.ப. 2:13)
  - மனம்மாறி பாவங்களிலிருந்து மன்னிப்பு பெற இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்கு பெறல். (தி.ப. 2:38-41)
  - கற்பித்தல், நட்புறவுடன் வாழல், அப்பம் பிட்குதல், இறைவேண்டுதலில் நிலைத்திருத்தல் என்பனவற்றில் உறுதியாய் நிலைத்திருந்தனர். (தி.ப. 2:42)
  - தமது உடைமைகளைப் பொதுவாகப் பாவித்தனர். (தி.ப. 2:45,4:34-37)
  - தூயாவியின் வல்லமையால் பல அருஞ்செயல்களும் அற்புதங்களும் இடம்பெற்றன. (தி.ப. 2:43,4:15-16)
  - கடவுளைப் போற்றி மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்று வாழ்ந்தனர். (தி.ப. 2:47)
  - திருச்சபை நாள்தோறும் வளர்ந்து வந்தது. (தி.ப. 2:47)
  - திருத்தூதர் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார்.

- சான்று பகர்ந்தனர். (தி.ப. 4:33)
- திருத்தூதர் இறைவார்த்தையை போதிப்பதிலும் சமூக பணி செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர். (தி.ப. 6:2)
- நற்சான்று பெற்றவர்களும் தூய ஆவி அருளும் வல்லமையும் ஞானமும் நிறைந்தவர்கள் திருத்தொண்டர்களாக நியமிக்கப்படல். (தி.ப. 6:3)
- இறைவார்த்தை அறிவிக்கப்பட வேண்டும்.
- சமூகபணிகள் செய்ய வேண்டும்.
- முதல் கிறிஸ்தவ சபையின் விழுமியங்களை முன்மாதிரியாக கொண்டு வாழவேண்டும்.

(20 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (தி..ப.2:1-3, 37-47, 4:32-37, 5:12-16, 6:1-7)
- A4 தாள், பேனைகள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- திருவிவிலியம் - தி.ப.2:1-3, 37-47, 4:32-37, 5:12-16, 6:1-7 வாசியுங்கள்.

குழு 1● ஆதி திருச்சபையின் விழுமியங்களைப் பட்டியல் படுத்துங்கள்.

குழு 2● ஆதி திருச்சபை நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக செயற்பட்ட முறைகளைக் குறித்துச் சஞ்சிகைக்குக் கடிதம் வரைக.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

நிவாரணம் வழங்கும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 3:0** : தூய ஆவியானவரின் துணிவு பெற்று வாழ்வில் புத்தொளி பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 11:3:2** : கிறிஸ்துவுக்காக கனிதரும் பணிக்குத் தம்மை ஒப்புவிப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- பேதுருவின் பணிகளின் தகவல்களைச் சேகரிப்பர்.
- கிறிஸ்துவுக்காக கனிதரும் பணிகளில் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- பணிகளின் சவால்களுக்கு துணிவுடன் முகம் கொடுப்பர்.
- பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- மாணவருக்குக் கடதாசிகளையும் பேனைகளையும் வழங்கி பேதுருவைப் பற்றி அறிந்துள்ளவற்றை எழுதி கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வெளிப்படுமாறு கலந்துரையாடுங்கள்.
    - சீமோன் பேதுரு ஒரு மீனவன்.
    - பேதுரு திருத்தூதர்களின் தலைவன் ஆவான்.
    - இயேசுவை இறைமகன் என அறிந்து கொண்ட முறை
    - இயேசு விசேட பணிக்காக தெரிந்து கொண்ட விதம்
    - பேதுரு இயேசுவை மறுதலித்தல்
    - இயேசு மகத்தான பொறுப்பை பேதுருவிடம் ஒப்படைத்தல்
    - பேதுரு இயேசுவுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட விதம்
    - எந்த சந்தர்ப்பத்திலும் இயேசுவுக்குப் பணி செய்திட முன்வர வேண்டும்

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை பொருத்தமான முறையில் சிறு குழுக்களாகப் பிரித்துத் தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கிக் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(25 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு மாணவரும் தமது செயற்பாடுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கி பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு கற்ற பாடத்தைச் சுருக்கமாக தெளிவுபடுத்துக.
    - தூயாவியால் நிரப்பப்பட்ட பேதுருவின் துணிவு (தி.ப. 2:14-16)
    - பேதுருவின் அருளுரை பணி. (தி.ப. 2:17-36)
    - பேதுருவின் குணப்படுத்தும் பணி. (தி.ப. 3:1-10)
    - சவால்களின் மத்தியில் துணிவான பணி.(தி.ப. 4: 12-22)
    - பேதுரு பிற இனத்தவர் மத்தியில் பணி (தி.ப.10:1-33)
    - சவால் நிறைந்த பணியின் மத்தியில் விளைவுகளை அனுபவித்தல். (தி.ப. 12:1-19)

- கிறிஸ்துவுக்காக துணிவுடன் பணி செய்தல் கிறிஸ்தவர்களின் பொறுப்பாகும்.
- சவால்களின் மத்தியில் பின்னடையக் கூடாது.
- பணி செய்வதற்காக தூயவியனவர் எம்மை எப்போதும் பலப்படுத்துகிறார்.
- பேதுருவை முன்னுதாரணமாக கொண்டு பலன் கொடுக்கும் பணிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

(20 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (தி.ப. 2:14-36, 3:1-10, 4:12-23, 10:1-33, 12:1-19)
- A4 தாள், பேனைகள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

குழு 1 -
- திருவிவிலியம் - தி.ப 2:14-36 வாசியுங்கள்.
- கருத்துக்களைக் கலந்துரையாடுங்கள்.
- “பேதுருவின் அருளுரைப் பணியை எமது பணிக்கு முன்மாதிரியாகக் கொள்வோம்” என்ற தலைப்பில் ஆக்கபூர்வமான அறிக்கை கட்டுரை எழுதுக.

குழு 2 -
- திருவிவிலியம் - தி.ப.3:1-10 வாசியுங்கள்.
- கருத்துக்களைக் கலந்துரையாடுங்கள்.
- “பேதுருவின் குணமாக்கும் பணியின் முன்மாதிரியால் வழிகாட்டலைப் பெறுவோம்” என்ற தலைப்பில் ஆக்கபூர்வமான அறிக்கை கட்டுரை எழுதுக.

குழு 3 -
- திருவிவிலியம் - தி.ப.4:12-23, 12:1-19 வாசியுங்கள்.
- கருத்துக்களைக் கலந்துரையாடுங்கள்.
- “பேதுருவின் சவால்களின் மத்தியில் பணியின் முன்மாதிரியால் நாம் சவால்களை சந்திப்போம்” என்ற தலைப்பில் ஆக்கபூர்வமான அறிக்கை கட்டுரை எழுதுக.

குழு 4 -
- திருவிவிலியம் - தி.ப 10:1-33 வாசியுங்கள்.
- கருத்துக்களை கலந்துரையாடுங்கள்.
- “பேதுரு பிற இனத்தவர் மத்தியில் பணியை பின்பற்றி பணிசெய்வோம்” என்ற தலைப்பில் ஆக்கபூர்வமான அறிக்கை கட்டுரை எழுதுக.

- ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

சிறுவர், வயோதிபர் இல்லங்களில் பணிசெய்ய வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 3:0** : தூய ஆவியானவரின் துணிவு பெற்று புது வாழ்வின் அனுபவத்தைப் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 3:3** : பவுலின் மனமாற்றத்தை ஏற்று வாழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- பவுலின் வாழ்வின் பின்னணி மற்றும் மனமாற்றம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.
- கிறிஸ்துவில் வாழ்வின் உருமாற்றத்தை அறியமுடியும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- கிறிஸ்துவின் வாழ்வின் மாற்றத்தை அனுபவத்தில் காண்பர்.
- நண்பர்களுக்காக இறைவனிடம் மன்றாடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- பவுலின் பெயர் குறிப்பிடப்படாத அவரது படத்தைக் காட்போட் மட்டையில் ஒட்டி வகுப்பில் காட்சிபடுத்துங்கள்.
- பின்வரும் திருவிவிலியப் பகுதிகளை வழங்குங்கள். தி.ப. 21:39, 22:2, 22:36, 26:5, 8:3
- திருவிவிலியப் பகுதிகளை வாசித்துப் பவுலைப் பற்றிய விரும்பிய ஒரு கருத்தை படத்தின் கீழ் எழுத மாணவரை முன்வருமாறு அழையுங்கள்.
- அதனைக் கொண்டு பின்வரும் கருத்துக்கள் வெளிப்படுமாறு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
  - பவுல் யூத இனத்தைச் சேர்ந்தவன்.
  - பவுல் தர்சு நகரில் பிறந்தவன்.
  - பவுலுக்கு பல மொழிகள் தெரியும்.
  - கமாலியேல் என்பவர் நீதி சட்டங்களை பவுலுக்கு கற்பித்தார்.
  - பவுல் ஒரு பரிசேயன்
  - பவுல் ஆரம்ப திருச்சபை மக்களை துன்புறுத்தினான்.
  - எந்தவொரு நபரைக்குறித்து கற்கும்போதும் அவரது பின்னணியை அறிந்து கொள்வது அவசியமாகும். (15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரைப் பொருத்தமான முறையில் சிறு குழுக்களாகப் பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கிக் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)

(45 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.
  - சவுலின் மறுபெயர் பவுல்
  - சவுலின் வாழ்வுப் பின்னணி. (தி.ப. 22:3-5)
  - சவுல் எனப்படும் பவுல் உரோம குடியுரிமை உடையவன் (தி.ப. 22:28)

- பவுல் யூத பரிசேயன் என்றபடியால் யூத மத சட்டங்களைப் பின்பற்றி வாழ்ந்தான். (தி.ப. 23:6)
- ஸ்தேவானின் மரணத்துக்குச் சாட்சி பகர்ந்தான். (தி.ப. 7:57-58இ 60)
- ஸ்தேவானுக்கு கல்வீசும் வேளையில் உடைகளை பாதுகாத்தான். (தி.ப. 7:59)
- சவுல் எருசலேமில் வாழ்ந்த கிறிஸ்தவ மக்களை துன்புறத்தினான். (தி.ப. 2:47)
- திருத்தூதர் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தாரென சான்று பகர்ந்தனர்.(தி.ப.:1-3)
- தமஸ்குவுக்கு செல்லும் வழியில் சவுலின் மனமாற்ற நிகழ்வு இடம்பெற்றது.

  (தி.ப. 9:)
- கிறிஸ்தவ மதத்துக்கு விசுவாசமுள்ளவனாக வாழ்தல்.
- கிறிஸ்துவை அறிந்து கொள்ள வாழ்வின் மாற்றத்தை அனுபவித்தல் அவசியம்.

(20 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (தி..ப. 7:57-60, 8:1-3, 9: 22:3-5, 27, 23:6)
- பெயர் எழுதப்படாத பவுலின் படம்
- A4 தாள்கள், பேனைகள், மாக்கர் பேனைகள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

குழு 1 -
- தி.ப. 22:3-5, 27, 23:6 பகுதியை வாசியுங்கள்.
- கருத்துக்களைக் கலந்துரையாடுங்கள்.
- ‘‘பவுல் எனப்படும் எனது வாழ்வின் பின்னணி’’ என்ற தலைப்பில் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

குழு 2 -
- தி.ப. 7:57-60, 8:1-3, 9:1-2 பகுதியை வாசியுங்கள்.
- கருத்துக்களைக் கலந்துரையாடுங்கள்.
- ‘‘கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய எனது கடந்த காலம்’’ என்ற தலைப்பில் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

குழு 3 -
- தி.ப. 9:3-21 பகுதியை வாசியுங்கள்.
- கருத்துக்களைக் கலந்துரையாடுங்கள்.
- ‘‘அதிசய அனுபவங்களில் எனது மனமாற்றம்’’ என்ற தலைப்பில் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

தவறுகளுக்காக மனம்வருந்தி மனமாற்றத்தை உருவாக்குவதற்கு வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 3:0** : தூய ஆவியானவரின் துணிவு பெற்று புது வாழ்வின் அனுபவத்தைப் பெறுவர் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 3:4** : கூட்டுத் தலைமைத்துவத்தை நாடுவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள்** :

- பவுல் 1ஆம் திருத்தூதுரைப் பயணத்தில் சென்ற இடங்கள், நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுவர்.
- கூட்டுத் தலைமைத்துவம் சிறந்தது என்பதை ஏற்றுக்கொள்வர்
- ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- நற்செய்திப் பணிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவர்.
- பிறருடன் இணைந்து பணி செய்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

படிமுறை 1

- இணைப்பு 1 ஐ மாணவர் பாடுவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்கள் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில ஈடுபடுங்கள்.
    - பர்னபா, பவுல் மற்றும் மாற்கு எனப்படும் யோவான் கூட்டு பணி செய்ய தெரிந்தெடுக்கப்பட்டனர்.
    - செலூக்கியாவில் கப்பல் ஏறி நற்செய்தி பணிக்குச் செல்லல்.
    - அவர்கள் கூட்டுப் பணி செய்தனர்.
    - கிறிஸ்தவ மத பரம்பலுக்காக கூட்டுப்பணி செய்த முறைகள்.
    - நோயாளரை குணமாக்கி அரும்செயல்கள் செய்தனர்.

(15 நிமிடங்கள்)

படிமுறை 2

- மாணவரைப் பொருத்தமான முறையில் சிறு குழுக்களாகப் பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)

(45 நிமிடங்கள்)

படிமுறை 3

- ஒவ்வொரு மாணவரும் தமது செயற்பாடுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கி பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு கற்ற பாடத்தைச் சுருக்கமாக தெளிவுபடுத்துக.
    - சீரியாவில் அந்தியோகியா சபை (தி.ப. 11:26, 13:1)
    - நற்செய்திப் பணியின் அவசியம்
    - தூயாவியின் வழிகாட்டலால் பவுல் நற்செய்தி பணிக்கு தெரிவு செய்யப்படல் (தி.ப. 13:2-3)
    - நற்செய்தி பணியின் ஆரம்பம். (தி.ப. 13:4)
    - சாலமியில் கூட்டுப்பணி செய்திட மாற்கு எனப்படும் யோவான் இணைதல். (தி.ப. 13:5)
    - பாப்போவில் கூட்டு தலைமைத்துவம். (தி.ப. 13:6-13)

- கூட்டுப்பணியால் நல் விளைவுகள் ஏற்படும்.
- யோவான் மாற்கு கூட்டுப்பணியிலிருந்து விலகிச் செல்லல் (தி.ப. 13:13)
- பிசீதிய அந்தியோகியாவில் கூட்டுப்பணியாளர்களின் அருளுரை (தி.ப. 13:14-52)
- இக்கோனியாவில் ஏற்பட்ட துன்பத்தால் கூட்டுத் தலைமைத்துவத்தின் விளைவுகள் (தி.ப. 14:1-7))
- லீஸ்திராவில் கூட்டுப்பணி (தி.ப. 14:8-18)
- எதிர்நோக்கிய துன்பங்களால் சிரியா அந்தியோகியாவுக்கு திரும்பிச் செல்லுதல். (தி.ப. 14:19-28)
- எருசலேம் மாநாட்டில் கூட்டுத் தலைமைத்துவப் பணியின் விளைவுகளைப் பற்றிக் கலந்துரையாடல். (தி.ப. 15:1-35)
- கிறிஸ்தவர்கள் கூட்டுப் பணி செய்திட வேண்டும்.
- கூட்டுத் தலைமைத்துவத்தால் நல் விளைவுகள் கிடைக்கும்.

( 40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (தி.ப. 11:26, 12:25, 13: 14: 15:1-35)
- A4 தாள், பேனைகள், மாக்கர் பேனைகள்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- திருவிவிலியம் மற்றும் பாடப் புத்தகத்தைக் கொண்டு பின்வரும் செயற்பாட்டை செய்யுங்கள்.
- ''பவுலின் நற்செய்திப் பயணமும் கூட்டுத்தலைமைத்துவமும்'' எனும் தலைப்பில் சிறு புத்தகம் ஒன்றை தயாரியுங்கள்.
- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.

**இணைப்பு 2**

கிறிஸ்தவ மறையின் அருமை கூறி

கிறிஸ்தவ மறையினை உலகில் பரப்பிட

உத்தமர் சிலரை அழைப்பு பெற்று

கூட்டுத்தலைமைத்துவ பணி செய்தனரே

பர்னபா பவுலுடன் இடையே யோவானுமே

அந்தியோகியா எனும் சபையிலிருந்தே

செலூக்கியாதனில் கப்பலேறியே

மறைதனை பரப்பிடவே பயணம் செய்தனரே

தொழுகைக்கூடமதில் இறை போதனை செய்திடவே

நோயாளரை குணமாக்கியே

தடைகளைத் தாண்டி வெற்றி கண்டிட

துணிவுடன் இறைபணி செய்தனரே

அரும்பல புதுமைகள் பல செய்திட

கிறிஸ்தவ மறையை பரப்பிட்டனர்

இரா பகல் பாராது துணிந்து பணி செய்திட

நற்பலன் பல பெற்று மகிழ்ந்தனரே.

**வீட்டுச் சூழல்**

குடும்பத்தவருடன் இணைந்து தேவையுள்ளவர்களின் மத்தியில் பணிசெய்திட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 3:0** : தூய ஆவியானவரின் துணிவு பெற்று புது வாழ்வின் அனுபவத்தைப் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 3:5** : பின்னடையாது துணிவுடன் பணி செய்வர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள்** :

- பவுல் 2 ஆம் திருத்தூதுரைப் பயணத்தில் சென்ற இடங்கள், நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுவர்.
- பின்னடையாது வீரத்துடன் பணிசெய்ய வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- இடத்துக்கு ஏற்றவாறு ஞானத்துடன் செயற்பட வேண்டும்.
- சவால்களின் மத்தியில் பின்னடையாது பணி செய்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2 ஐ மாணவன் ஒருவனால் வாசிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்கள் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
  - நற்செய்திப் பணியின் அடிப்படை.
  - நற்செய்திப் பணியின் முக்கியத்துவம்.
  - நற்செய்திப் பணியாளர் அர்ப்பணிப்புடன் பணி செய்தனர்.
  - நற்செய்தி பணியாளரின் மகத்தான பணியால் பல இடங்களுக்கும் நற்செய்தி பரவியது.
  - பேதுரு, பவுல், பர்னபா, சீலா என்பவர்கள் அர்ப்பணிப்புடன் நற்செய்திப் பணியாற்றினர்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை பொருத்தமான முறையில் சிறு குழுக்களாகப் பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கிக் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)

(45 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.
  - பல தடைகளையும் கடந்து நற்செய்தி பணி முன்னேறியது. தி.பா. 15:36-41)
  - பவுலின் 2ஆம் திருத்தூதுரைப் பயணத்தில் அர்ப்பணிப்புடன் இணைந்தவர்கள் (தி.ப. 15:40-41, 16:1-5)
  - நற்செய்தி பணியில் தூயாவின் வழிநடத்தல் (தி.ப. 16:6-10)

- சவால்களில் வெற்றி காண பின்னடையாத வீரம்- பிலிப்பு நிகழ்வு (தி.ப. 16:11-40)
- நற்செய்தி பணியின் முன்னேற்றத்தில் பின்னடையாத வீரம். தெசலோனிக்கா, பெரேயா (தி.ப. 17:1-15)
- சூழ்நிலைக்கேற்ற ஞானத்துடன் கிறிஸ்தவ மதத்தை பரப்புவதில் பின்னடையாத வீரம். ஏதென்ஸ் (தி.ப. 17:16-34)
- தொழிலின் மத்தியில் நற்செய்தி பரப்பலில் பின்டையாத வீரம் -கொரிந்து (தி.ப.18:3)
- பின்னடையாது 2ம் திருத்தூதுரைப் பயணத்தை நிறைவு செய்தல். (தி.ப 18:18-23)
- பின்னடையாது துணிவுடன் நிறைவடையும் பணிகளின் முக்கியத்துவம்.
- கிறிஸ்தவன் என்ற வகையில் நற்செய்தி பணிசெய்ய துணிவுடன் பங்களித்தல்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (தி..ப. 15:36-41, 18:1-23, 16:, 17:)
- 2 ஆம் திருத்தூதுரைப் பயணம் - வரைபடம்
- A4 தாள், பேனைகள்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

குழு 1 -
- தி.ப. 16:1-40 பகுதியை வாசியுங்கள்.
- கருத்துக்களைக் கலந்துரையாடுங்கள்.
- மேற்படி திருவிவிலியப் பகுதியில் 2 ஆம் திருத்தூதுரைப் பயணத்தில் பவுல் சென்ற இடங்களைக் குறிப்பிடுக.
- பவுலின் துணிவான பணிகளையும் எமக்கு கிடைக்கும் முன்மாதிரிகளையும் குழு அங்கத்தவர் ஒருவர் முன்னின்று கதையாக கூறுதல்.

குழு 2 -
- தி.ப. 17:1-15 பகுதியை வாசியுங்கள்.
- கருத்துக்களைக் கலந்துரையாடுங்கள்.
- மேற்படி திருவிவிலியப் பகுதியில் 2 ஆம் திருத்தூதுரைப் பயணத்தில் பவுல் சென்ற இடங்களை குறிப்பிடுக.
- பவுலின் துணிவான பணிகளையும் எமக்கு கிடைக்கும் முன்மாதிரிகளையும் குழு அங்கத்தவர் ஒருவர் முன்னின்று கதையாக கூறுதல்.

குழு 3 -
- தி.ப. 17:16-34 பகுதியை வாசியுங்கள்.
- கருத்துக்களைக் கலந்துரையாடுங்கள்.
- மேற்படி திருவிவிலிய பகுதியில் 2 ஆம் திருத்தூதுரைப் பயணத்தில் பவுல் சென்ற இடங்களைக் குறிப்பிடுக.

- பவுலின் துணிவான பணிகளையும் எமக்கு கிடைக்கும் முன்மாதிரிகளையும் குழு அங்கத்தவர் ஒருவர் முன்னின்று கதையாகக் கூறுதல்.

குழு 4 - 
- தி.ப. தி.ப. 18:1-17 பகுதியை வாசியுங்கள்.
- கருத்துக்களைக் கலந்துரையாடுங்கள்.
- மேற்படி திருவிவிலியப் பகுதியில் 2 ஆம் திருத்தூதுரைப் பயணத்தில் பவுல் சென்ற இடங்களைக் குறிப்பிடுக.
- பவுலின் துணிவான பணிகளையும் எமக்கு கிடைக்கும் முன்மாதிரிகளையும் குழு அங்கத்தவர் ஒருவர் முன்னின்று கதையாகக் கூறுதல

- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

## இணைப்பு 2

மிஷனரி சேவையானது மிக உன்னதமான பணியாகும். மிஷனரி பணியின் அடிப்படை இறையன்பு ஆகும். பேதுரு, பவுல், பர்னபா, சீலா, திமொத்தேயு போன்றவர்கள் நற்செய்தியைப் பரப்புவதற்காக பின்னடையாது துணிவுடன் செயற்பட்டனர். இது இவர்களைப் பற்றிய கதை அல்ல. ஆனால் அவர்களைப் போன்று நற்செய்தியைப் பரப்ப துணிவுடன் செயற்பட்ட சில மிஷனரிமார்களின் கதையாகும்.

இன்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன் 5 இளம் மிஷனரி குடும்பத்தவர்கள் தென் அமெரிக்காவை நோக்கி பயணம் செய்தனர். அவர்கள் நற்செய்தியை ''ஓர்கா'' எனும் வனாந்தரப் பகுதியில் வாழ்ந்து வந்த குலத்தவருக்கு அறிவிக்கச் சென்றனர். அங்கு வாழ்ந்த மக்கள் பிறரை நம்பாதவர்கள். மிஷனரிமார் ஒர்கா மக்களும் நற்செய்தியை ஏற்றுக் கொள்ள வேண்டுமென பின்னடையாது தமது வாழ்வில் உருவாகும் சவால்களையும் கருதாது சென்றனர்.

மேற்படி இளம் மிஷனரிமார் முதலாவதாக ஒர்கா மொழியைக் கற்றனர். அவர்கள் வாழ்ந்து வந்த காட்டுப்பிரதேசத்திற்கு விமானத்திலிருந்து பரிசு பொதிகளை வீசினர். அதில் ''நாங்கள் உங்களை நேசிக்கின்றோம்'' என எழுதப்பட்டிருந்தது.

இறுதியாக ஒர்கா மக்களை சந்திக்கும் சந்தர்ப்பம் மிஷனரிமாருக்கு கிடைத்தது. தமது மனைவிமார், பிள்ளைகளை நகரத்தில் விட்டு மிஷனரிமார் ஒர்கா மக்கள் வாழ்ந்த காட்டுப் பகுதியில் முகாம் அமைத்து வாழ்ந்தனர். தமது முகாம்களுக்கு வருமாறு ஒர்கா மக்களை அழைத்தனர். முதலில் அவர்களுடன நண்பராகி பின்னர் நற்செய்தியை அறிவிக்க விரும்பினர்.

ஆனால் அந்நிலை அவர்களுக்கு அமையவில்லை. ஆற்றினருகில் 5 மிஷனரிமாரையும் ஒர்கா மக்கள் கொலை செய்தனர். அன்புக்கு மாறாக பயமும் பகைமையும் வெற்றி கண்டது.

இந் நிகழ்வு இடம்பெற்று சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஒர்கா வாழ் மக்கள் நற்செய்தியை பின்பற்றினர். 5 மிஷனரிமார்களைக் கொலைசெய்த அவர்கள் கிறிஸ்துவை ஏற்று கிறிஸ்துவைப்பற்றி அறிவிக்கத் தொடங்கினர். 2வது முறையாக நற்செய்தியைக் கேட்கும் சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைத்தது எப்படி?

உங்களால் நினைத்துப் பார்க்க முடியுமா?

ஒர்கா மக்களால் கொலைசெய்யப்பட்ட மிஷனரிகளின் மனைவியர் தமது வாழ்வைக் கருத்தில் கொள்ளாது தமது கணவர்மாருக்கு இடம்பெற்ற நிகழ்வையும் கருதாது திரும்பவும் ஒர்கா மக்களிடம் சென்று நற்செய்தியை அறிவித்தனர். அவர்களது முயற்சி வெற்றி பெற்றது. ஒர்கா மக்கள் நற்செய்தியை ஏற்று வாழ்ந்தனர். இது பின்னடையாது துணிவுடன் ஆற்றிய இறையன்பின் கனிதரும் பலனாகும்.

### வீட்டுச்சூழல்

நற்செய்தி பணிக்காக விண்ணப்பம் செய்வதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 3:0** : தூய ஆவியானவரின் துணிவு பெற்று புது வாழ்வின் அனுபவத்தைப் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 3:6** : பணியின் சவால்களுக்கு சந்தர்ப்பத்துக்கேற்றவாறு மாறுத்தரம் காட்டுவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள்** :

- பவுல் எபேசுவைச் சூழ்ந்த நகரங்களில் செய்த பணிகளின் தகவல்களை சேகரிப்பர்.
- பணியில் ஏற்படும் சவால்களை வெற்றிகொள்ள வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- நற்செய்தி பணியின் சவால்களில் வெறறி காண்பர்.
- நற்செய்தியைப் பிறருடன் பகிர்ந்து கொள்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2 ஐ மாணவர் ஒருவரால் வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்துமாறு கலந்துரையாடுங்கள்.
  - பவுலின் பணியில் சீலாவும் சேர்ந்து கொண்டார்.
  - 3 ஆம் திருத்தூதுரைப் பயணத்தில் பல சவால்களை எதிர் நோக்கிய முறைகள்
  - பவுலின் 3 ஆம் திருத்தூதுரைப் பயணம் எபேசுவை சூழ இடம்பெற்றது.
  - சவால்களில் வெற்றி காண தூயாவியானவர் துணை செய்கின்றார்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரைப் பொருத்தமான முறையில் சிறு குழுக்களாகப் பிரித்துத் தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கிக் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)

(65 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.
  - பவுல் 3 ஆம் திருத்தூதுரைப் பயணத்தில் எருசலேமுக்குச் செல்லல் (தி.பா. 15:36-41)
  - பவுல் எபேசுவில் பல சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றி காணல் (தி.ப. 18:24-19:10)
  - இயேசுவின் பெயரை தவறான வகையில் பாவித்தல்தோல்வியின் சவாலாகும். (தி.ப. 19:11-17)
  - மூட நம்பிக்கையான சிலை வணக்கத்தை மனிதரிடமிருந்து அகற்றும் சவால். (தி.ப. 19:18-41)
  - எபேசுவை சூழ்ந்த நகரங்களில் பவுலின் சவால் நிறைந்த பணி (தி.ப. 20:1-21:19)

- எபேசுவைச் சூழ்ந்த நகரங்களில் பவுலின் சவால் நிறைந்த பணி (தி.ப. 20:1-21:19)
- கிறிஸ்துவுக்கான பணியில் சவால்கள் அதிகம்
- கிறிஸ்தவர் என்ற வகையில் சத்திய சமய வாழ்வில் நிலைத்திருப்பதன் முக்கியத்துவம்.
- இறைவனை மட்டும் வழிபடுவதில் ஈடுபடுதல்.
- சவால்களில் வெற்றி காண தூயாவியின் துணிவும் பலமும் கிடைத்தல்.
- இயேசுவில் உறுதியான விசுவாசத்துடன் வாழ்தல்

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (தி.ப. 18: 24-21:19)
- பெரிய வெள்ளைக் கடதாசி
- A4 கடதாசி, பேனைகள்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1
## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

குழு 1 -
- தி.ப. 18: 24-21:19 பகுதியை வாசியுங்கள்.
- கருத்துக்களைக் கலந்துரையாடுங்கள்.
- "சத்திய வழியில் வாழ்வோம" எனும் தலைப்பில் குழு அங்கத்தவர் தனித்தனியாக கடிதம் எழுதுக.

குழு 2 -
- தி.ப. 18: 24-21:19 பகுதியை வாசியுங்கள்.
- கருத்துக்களைக் கலந்துரையாடுங்கள்.
- "இறை நாமத்தை மதித்து வாழ்வோம்" எனும் தலைப்பில் குழு அங்கத்தவர் தனித்தனியாக கடிதம் எழுதுக.

குழு 3 -
- தி.ப. 19:18-41 பகுதியை வாசியுங்கள்.
- கருத்துக்களைக் கலந்துரையாடுங்கள்.
- "ஒரே இறைவனை வழிபடுவோம்" எனும் தலைப்பில் குழு அங்கத்தவர் தனித்தனியாக கடிதம் எழுதுக.

குழு 4 -
- தி.ப. 20:1-21:19 பகுதியை வாசியுங்கள்.
- கருத்துக்களைக் கலந்துரையாடுங்கள்.
- "சவால்களில் வெற்றி காண்போம்" எனும் தலைப்பில் குழு அங்கத்தவர் தனித்தனியாக கடிதம் எழுதுக.

- அனைத்துக் கடிதங்களையும் சேகரித்து வகுப்பு செய்தி தாள் தயாரிக்கவும். அதற்கு ‘‘புத்தொளி’’ என பெயரிடுக.

  - உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

## இணைப்பு 2

எனது பெயர் சீலா. நான் 2 ஆம் திருத்தூதுரைப் பயணத்தில் பவுலுடன் இணைந்து கொண்டேன். கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்புவதில் பவுலிடம் காணப்பட்ட ஆர்வத்தை வார்த்தைகளால் விபரிக்க முடியாது. இரவு - பகல் பாராது இறைவனுக்காக விசுவாசத்துடன் பணி செய்தார் பவுல். அவ்வாறு பணி செய்யும் வேளையில் பவுல் பல சவால்களை எதிர் நோக்கினார். பிலிப்புவில் சிறைக் கைதியாக கசையடிப்பட்டார். தெசலோனிக்கேயாவிலும் பெரேயாவிலும் அதிக துன்பங்களை அனுபவித்தார். நானும் பவுலுடன் சேர்ந்து சவால்களை சந்தித்தமை உண்மையிலேயே மகழ்ச்சிக்குரியது. ஏதென்ஸி நகரில் பிற தெய்வங்களின் மத்தியில் இயேசுவை அறிமுகப்படுத்தும் சவாலில் பவுல் செயற்பட்ட விதமானது போற்றத்தக்கது. இறைவார்த்தையை போதித்து விசுவாசமுடன் முன்னோக்கி சென்றாலும் எதிர்பாராவண்ணமாக பல சவால்களை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனாலும் இறைவன் எப்போதும் எமது அருகிலிருந்து சவால்களை வெற்றி கொள்ள எமக்களித்த சக்தியும் துணிவும் மகத்தானது அதன் பின்னர் எமது 3 ஆம் திருத்தூதுரைப்பயணத்தின் மத்திய நிலையமாக அமைந்த இடம் எருசலேம் ஆகும். அங்கு இடம்பெற விருப்பதை இறைவன் மட்டுமே அறிவார். இருப்பினும் அனைத்து சவால்களிலும் வெற்றி காண தூயாவியானவர் எமக்கு உதவி செய்ய வேண்டுமென்பதே எமது வேண்டுகோளாகும்.

### வீட்டுச்சூழல்

நாள்தோறும் இறைவார்த்தையை வாசித்து விண்ணப்பம் செய்து வாழ்வின் சவால்களில் வெற்றி காண வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 3:0** : தூய ஆவியானவரால் துணிவு பெற்று புதுவாழ்வின் அனுபவத்தைப் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 3:7** : துணிவுடன் சத்தியத்திற்கு சான்று பகர்வர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள்** :

- பவுலின் உரோமைய பயணம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.
- துணிவுடன் சத்தியத்திற்கு சான்று பகர வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- நாடக பிரதியொன்றைத் தயாரிப்பர்.
- தூதுப்பணிக்கான அழைப்பு உள்ளதென அறிந்துகொள்வர்.
- துணிவுடன் சான்று பகர்ந்து கிறிஸ்துவை பிறருக்கு அறிவிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- தமது வாழ்வில் தூய ஆவியரின் ஆற்றலின் அனுபவம் பற்றி சில மாணவரின் சாட்சிகளை பகிர்ந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்கள் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - வாழ்க்கைப் பயணத்தில் நாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.
  - தூய ஆவியானவர் பிரச்சனைகளை வெற்றிகொள்ள உதவுகின்றார்.
  - இயேசு பல்வேறு வழிகளில் எமக்கு பதிலளிக்கிறார்.
  - இயேசு எமக்குச் செய்த பெரிய காரியங்களைக் குறித்து நாம் சான்று பகர வேண்டும்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை பொருத்தமான முறையில் சிறு குழுக்களாகப் பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளை வழங்ககி குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)
- மாணவரை அவதானித்து அறிவுறுத்துங்கள்.

(65 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.

  - பவுல் உரோம பேரரசின் தீர்ப்புக்கு உள்ளாதல்.(தி.ப 25: 10-11, 26:32 - 27:1)
  - பவுலின் கடல் பிரயாணமும் சாட்சி பகர்தலும். (தி.ப 27ம் அதிகாரம்)
  - மால்தா தீவில் சான்று பகர்தல் (தி.ப 28: 1-10)
  - உரோமையில் சத்தியத்திற்கு சான்று பகர்தல் (28: 11-30)
  - போராட்டத்தின் மத்தியில் சான்று பகர்தலின் முக்கியத்துவம்.
  - கிறிதவர்கள் துணிவுடன் சத்தியத்திற்கு சான்று பகர வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (தி.ப 25 : 11, 26: 32, தி.ப 27, 28 ம் அதிகாரங்கள், )
- பிரிஸ்டல் மட்டை, A4 கடதாசி, கடதாசி, மார்க்கர் பேனை, பேனை
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் -**

பின்வரும் கற்றல் பேறுகளைப் பயன்படுத்தி ஆயத்தம் செய்யுங்கள்

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

குழு **1,2,3**

- தி.பணி 25: 10-11, 26: 32, அதிகாரங்கள் 27, 28 திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- அதைப்பற்றிக் குழுக்களில் கலந்துரையாடுங்கள்.
- அதனைக் கொண்டு 'துணிவுடன் சத்தியத்திற்கு சான்று பகர்வோம்' எனும் தலைப்பில் நாடகப் பிரதியொன்றை தயாரியுங்கள்.

- ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

கிறிஸ்துவுக்கு சான்று பகர்வதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறையரசின் விழுமியங்களைக் கடைப்பிடித்து ஒழுக்கம் நிறைந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்பு வழங்குவர்.

**தேர்ச்சி மட்டம் 4:1** : கிறிஸ்துவின் அன்பின் ஒளியினால் தனது வாழ்வைப் பிரகாசிக்க செய்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- நிக்கோதேமுவும் சமாரிய பெண்ணும் இயேசுவின் அன்பை அனுபவித்த முறை தொடர்பான கருத்துக்களைச் சேகரிப்பர்.
- கிறிஸ்துவை பின்பற்றுவதால் எமது வாழ்வு ஒளி பெறும் என ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கப்பூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்.
- கிறிஸ்துவில் காணப்பட்ட பண்புகளைப் பின்பற்றுவர்.
- அனைவரோடும் அன்போடு வாழ்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- மாணவரை தியானத்தில் ஈடுபடுத்தி இணைப்பு 2ல் உள்ள பாடலைப் பாடுங்கள்.
- பின்வரும் கருத்துக்கள் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
    - எமது வாழ்வை இறைவனிடம் ஒப்புக்கொடுக்க வேண்டும்.
    - இறைவன் எம்மை நல்வழிப்படுத்தும் முறை.
    - இறைவனிடம் எம்மை ஒப்புக்கொடுப்பதால் எமக்கு ஏற்படும் நிம்மதி.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை பொருத்தமான முறையில் சிறு குழுக்களாகப் பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கிக் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)
- மாணவரை அவதானித்து அறிவுறுத்துங்கள்.

(25 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.
    - நிக்கதேமு பரிசேயரும் யூதரும் இஸ்ரயேலின் குருவுமாவார்.
    - நிக்கதேமு இயேசுவை சந்திக்க வருதல்.
    - இயேசு நிக்கதேமுவுக்கு இறையரசில் நுழைவதை குறித்து விளக்கமளித்த முறை (யோவான் 3: 1-15)
    - தூய ஆவியானவரில் புதிய பிறப்பை அனுபவிக்க வேண்டும்.
    - சமாரிய பெண்ணும் இதைப்பற்றி கேள்வி கேட்டாள். (யோவான் 4: 7-10)
    - இயேசுவே வாழ்வு தரும் தண்ணீர்( யோவான் 4: 10)
    - கிறிஸ்து கொண்டிருந்த மனநிலை (பிலி 2: 1-5)
    - கிறிஸ்துவில் காணப்பட்ட மனநிலை எம்மிலும் காணப்பட வேண்டும்.
    - இருளான உலகில் ஒளிரும் தாரகையாக செயற்படவேண்டிய முறை.

- இயேசுவின் அன்பின் ஒளியினால் வாழ்வில் பிரகாசிக்க வேண்டும்.

(25 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (யோவான் 3:1-15, 4: 7-10, பிலி 2: 1-5, 16)
- A4 கடதாசி, மார்க்கர் பேனை
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் - பின்வரும் கற்றல் பேறுகளை பயன்படுத்தி ஆயத்தம் செய்யுங்கள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- யோவான் 3:1-15, 4: 7-10, பிலி 2: 1-5, 16 திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- இப்பகுதியைக் குறித்து ஏனைய மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- அதனைக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.

1. இயேசு நிக்கதேமுவுக்கும் சமாரிய பெண்ணுக்கும் அளித்த விசேட செய்தி என்ன?
2. பிலி 2:1-5, 16 ஏற்ப உமது வாழ்வை எவ்வாறு அழகுபடுத்துவீர்?
3. கிறிஸ்துவின் அன்பை அனுபவித்து பிறருக்கு ஒளிகொடுப்பதற்கு உங்களிடம் இருக்க வேண்டிய இறையரசின் பெறுமதி என்ன?

- விடைகளை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

ஒருவரோடு ஒருவர் அன்புடன் செயற்படுவதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்கம் நிறைந்த சமூகத்தை கட்டியெழுப்புவதில் பங்களிப்பு வழங்குவர்.

**தேர்ச்சி மட்டம் 11:4:2** : கிறிஸ்துவில் ஆழமான உறவை ஏற்படுத்தி, குடும்பம் மற்றும் சமூகத்தைக் கட்டியெழுப்ப ஒத்துழைப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- கிறிஸ்தவ குடும்பம், சமூகத்தின் பொறுப்புத் தொடர்பான கருத்துக்களை சேகரிப்பர்.
- இறை அச்சத்தோடு செயற்பட வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கப்பூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்.
- பெற்றோருக்கு கீழ்ப்படிவர்.
- பிறரின் தேவைகளில் உதவுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2ல் உள்ள பாடலைப் பாடுவதற்கு ஒழுங்கு செய்யுங்கள்
- பின்வரும் கருத்துக்கள் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
  - குடும்பத்தின் ஆக்கியோன் இறைவன்.
  - ஆதாமும் ஏவாளும் முதல் மனித குடும்பமாகும்.
  - குடும்பமானது அன்போடு இயங்க வேண்டும்.
  - குடும்பத்தின் நன்நடத்தை சமூகத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை பொருத்தமான முறையில் சிறு குழுக்களாகப் பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)
- மாணவரை அவதானித்து அறிவுறுத்துங்கள்.

(25 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.
  - மனிதன் தனிமையாய் இருப்பது உகந்ததல்ல என்று கண்டு இறைவன் துணையை ஏற்படுத்தினார்.
  - மனிதனின் விலா எழும்பிலிருந்து பெண்ணைப் படைத்தார்.
  - கிறிஸ்தவ குடும்பத்திலும் சமூகத்திலும் பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய முறை. (கொலோ 3:12-21)
  - கிறிஸ்தவ குடும்பத்தில் கணவன், மனைவி, பிள்ளைகளுக்கான கடமைகளும் பொறுப்புக்களும். (எபே 5: 21- 6: 4)
  - கிறிஸ்தவ பிள்ளையாக இயேசுவோடு ஆழமான உறவுடன் குடும்பத்திலும் சமூகத்திலும் செயற்பட வேண்டிய முறைகள்.

(25 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (தொ.நூ 2:18-25, கொலோ 3:18-21, எபே 5: 21-6:4, கொலோ 3: 12-17, மத் 25: 31-46, தீத்து 3: 1-2, யாக் 2: 1-4, சபை உரை 5: 8)
- A4 கடதாசி, மார்க்கர் பேனை
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் - பின்வரும் கற்றல் பேறுகளை பயன்படுத்தி ஆயத்தம் செய்யுங்கள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

உங்கள் குழுவுக்குக் கொடுக்கப்பட்ட திருவிவிலிய பகுதியை வாசித்துக் குழுவுக்குள்ளே கலந்துரையாடுங்கள்.

குழு 1 -
- கொலோ 3:18-21, கொலோ 3: 12-17 பகுதிக்கு ஏற்ப கிறிஸ்தவ குடும்பத்திலும் கிறிஸ்தவ சமூகத்திலும் இருக்க வேண்டிய பொறுப்புக்களை வரிசைப்படுத்துங்கள்.
- எபே 5: 21-6:4 பகுதிக்கேற்ப கிறிஸ்தவ குடும்பத்தின் அங்கத்தவர்களான கணவன், மனைவி, பிள்ளைகளுக்குரிய பண்புகள் தொடர்பான பட்டியலொன்றை ஒழுங்கு செய்யுங்கள்.

குழு 2 -
- மத் 25: 31-46, தீத்து 3: 1-2, யாக் 2: 1-4, சபை உரை 5: 8 பகுதிக்கேற்ப கிறிஸ்துவோடுள்ள ஆழமான உறவில் சமூகத்தின் தேவையை நிறைவேற்றி வாழ்வதற்கு நீங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றிய கருத்துக்களை வரிசைப்படுத்துங்கள்.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு தயாராகுங்கள்.

**இணைப்பு 1**

அன்பாலே நாம் ஒன்றாகினோம்
எந்நாளுமே இறைமைந்தரே
நம் சொந்தம் பந்தம் இன்பம்

நம் நாதர் இயேசு
நம் நல்வாழ்வின் துணையாக வந்தார்
வழியாகவே ஒளியாகவே உயிராகவே ஆனார்

நீயென்றும் நானென்றும் இல்லை இனி
அவர் அன்பில் நாம் ஒன்று ஆவோம்
இனிதாகவே கனிவாகவே
துணையாகவே ஆனார்

காரிருள் தன்னில் ஒளி ஈந்த அண்ணல்
எம் அகவாழ்வில் சுடராக வந்தார்
மொழியாகவே இனமாகவே உறவாகவே ஆனார்.

**வீட்டுச் சூழல்**

இரக்க செயல்களில் ஈடுபடுவதற்கு பழக்குங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்கம் நிறைந்த சமூகத்தை கட்டியெழுப்புவதில் பங்களிப்பு வழங்குவர்.

**தேர்ச்சி மட்டம் 11:4:3** : சமூகத்தில் அனைவரோடும் சக வாழ்வு வாழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- சகவாழ்வுடன் வாழுதல் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.
- உண்மையை பேச வேண்டும் என ஏற்றுக் கொள்வர்.
- ஆக்கப்பூர்வமான உரையொன்றை முன்வைப்பர்.
- நல்ல சமூக உறவை வளர்க்கப் பங்களிப்பு வழங்குவர்.
- அனைவரோடும் சகவாழ்வு வாழ்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- முன் ஆயத்தத்துடன் இணைப்பு 2 ஐ வழங்கி அதனைப் பாடுவதற்கு மாணவரை ஆயத்தப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
  - நாம் உயிருள்ள இறைவனின் பிள்ளைகள்.
  - நாம் நல்லதை நிறைவேற்ற வேண்டும்.
  - இறைவன் எம்முடன் இருக்கிறார்.
  - இறை அச்சம் கொள்ள வேண்டும்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரைப் பொருத்தமான முறையில் சிறு குழுக்களாகப் பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)

(25 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.
  - சமூக தொடர்பை வைத்துக்கொள்ள துன்பம், தாழ்மை, பொறுமையோடு துன்பங்களை ஏற்றல் போன்ற பண்புகள் காணப்பட வேண்டும். (2 கொரி 6 :4)
  - இறைவனின் பணியாளர்களாக கொண்டிருக்க வேண்டிய பண்புகள். (2 கொரி 6: 6)
  - நேர்மை எனும் படைக்கலத்தால் பலம் பெறுதல். (2 கொரி 6: 7-10)
  - நம்பிக்கை கொண்டவராக நல்ல உறவை ஏற்படுத்தல். (2 கொரி 6: 14-16)
  - எமக்கு அருளப்பட்ட கொடைகளை திருச்சபையின் வளர்ச்சிக்கென பயன்படுத்த வேண்டும். (எபே 4: 15)
  - அன்புடன் சமூக உறவை வளர்க்க வேண்டும்.
  - அனைவரோடும் சகவாழ்வு வாழ வேண்டும்.

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (எபே 4: 6-16, 2 கொரி 6: 4-7: 1)
- A4 கடதாசி, பேனைகள்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் -**

பின்வரும் கற்றல் பேறுகளைப் பயன்படுத்தி ஆயத்தம் செய்யுங்கள்

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- எபே 4: 6-16, 2 கொரி 6: 4-7: 1 வாசியுங்கள்.
- இப்பகுதியைக் குறித்து ஏனைய மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- 'கிறிஸ்துவோடு ஒரே உடலாக சகவாழ்வு வாழ்வோம்' எனும் தலைப்பின் கீழ் தேவையான கருத்துக்களை ஒழுங்குபடுத்தி உரையொன்றை முன்வையுங்கள்.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு தயாராகுங்கள்.

**இணைப்பு 2**

ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன்
என் சகோதரன

வறுமையில் வாழ்பவன் என் நண்பன்
வறுமையில் இருப்பவன் என் சகோதரன்
அல்லல் படுபவன் என் நண்பன்
ஆபத்தில் இருப்பவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன்

அழகை இழந்தவன் என் நண்பன்
அறிவை இழந்தவன் சகோதரன்
ஊனமாய் பிறந்தவன் என் நண்பன்
ஊமையாய் பிறந்தவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன்

**வீட்டுச் சூழல்**

தகாத உறவுகளிலிருந்து தவிர்த்துக் கொள்வதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்கம் நிறைந்த சமூகத்தை கட்டியெழுப்புவதில் பங்களிப்பு வழங்குவர்.

**தேர்ச்சி மட்டம் 4:4** : இறை வழிகாட்டலுடன் நல்வாழ்வுக்கு பழக்கப்படுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- நல்வாழ்வுக்கு பழக்கப்படுத்திக்கொள்ளும் முறை தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.
- தூய ஆவியானவரின் வழிகாட்டலோடு செயற்பட வேண்டும் என ஏற்றுக் கொள்வர்.
- ஆக்கப்பூர்வமான சுவரொட்டியொன்றை முன்வைப்பர்.
- ஊனியல்பின் இச்சையை விட்டுவிடுவர்.
- சமூகத்தில் நன்மையை நிலைநாட்டுவதில் ஈடுபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- சமூக விரோத செயல்கள் தொடர்பான பத்திரிகைத் தலைப்புக்கள் சிலவற்றை உள்ளடக்கியதான சுவரொட்டியை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
  - சமூக விரோத செயல்களால் பலர் துன்பங்களுக்கு உள்ளாகின்றனர்.
  - சமூக விரோத செயல்களில் ஈடுபடுவதால் ஏற்றுக்கொள்ளப்படாதோர்.
  - சமூகத்தில் நன்மையை நிலைநாட்டுவதில் ஈடுபட வேண்டிய முறை.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரைப் பொருத்தமான முறையில் சிறு குழுக்களாகப் பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கிக் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)

(40 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.
  - துன்ப துயரங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள். (நீதி மொழி 23: 29-35)
  - உண்மையை பேசுதல். (எபே 4: 25)
  - தூய ஆவியின் வழிகாட்டலுக்கு ஏற்ப செயற்படல். (கலா 5: 16)
  - ஊனியல்பின் இச்சைகளை கைவிடுதல். (கலா 5: 17-19)
  - ஊனியல்பின் செயல்களை அறிந்துகொள்ளல். (கலா 5: 19-21)
  - எமது செயற்பாடுகள் இறைவனுக்கு முன் ஏற்புடையதாக வேண்டும். (உரோ 12: 1)
  - நல்வாழ்வு பழக்கங்களை கைக்கொள்ள வேண்டும்.

(20 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (உரோ 12: 1, நீதிமொழி 23: 29-35, எபே 4: 25, கலா 5: 16- 21)
- சமூக விரோத செயல்கள் தொடர்பாக பத்திரிகை தலைப்புகள் அடங்கிய சுவரொட்டி
- A4 கடதாசி, பேனைகள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் -**

பின்வரும் கற்றல் பேறுகளைப் பயன்படுத்தி ஆயத்தம் செய்யுங்கள்

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

F O 1

- எபே 4: 25, கலா 5: 16- 21 வாசியுங்கள்.
- இப்பகுதியைக் குறித்து கலந்துரையாடுங்கள்.
- ‘தூய ஆவியின் வழிநடத்தலோடு செயற்படுவதற்கு நீங்கள் விட்டுவிட வேண்டிய விடயங்களை வரிசைப்படுத்திச் சுவரொட்டியொன்றை தயாரியுங்கள்.

குழு 2

- உரோ 12: 1, நீதிமொழி 23: 29-35 வாசியுங்கள்.
- இப்பகுதியைக் குறித்துக் கலந்துரையாடுங்கள்.
- ‘தீய செயல்களால் சமூகம் முகங்கொடுக்கும் பிரச்சினை’ தொடர்பான சுவரொட்டியொன்றைத் தயாரியுங்கள்.
- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

பல்வேறு தீச்செயல்களிலிருந்து விலகியிருப்பதில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்கம் நிறைந்த சமூகத்தை கட்டியெழுப்புவதில் பங்களிப்பு வழங்குவர்.

**தேர்ச்சி மட்டம் 4:5** : வறுமை ஒழிப்புக்கு கைகொடுத்து உதவுவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறு** :

- வறுமை தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.
- வறுமை ஒழிப்புக்கு கைகொடுக்க வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கப்பூர்வமான செயற்பாட்டினை முன்வைப்பர்.
- சுறுசுறுப்புடன் செயற்படுவர்.
- ஒவ்வொருவரின் தேவைகளையும் நிறைவேற்றுவதில் ஈடுபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- நீதி மொழி 6: 6-11 எறும்பின் பாடத்தைப் பலகையில் எழுதி வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
  - ஞானமாக செயற்படவேண்டும்.
  - சோம்பலை கைவிடவேண்டும்.
  - வறுமையை ஒழிப்பதற்கு ஞானமாகவும் சுறுசுறுப்புடனும் செயற்பட வேண்டும்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரைப் பொருத்தமான முறையில் சிறு குழுக்களாகப் பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கிக் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)
- மாணவரை அவதானித்து அறிவுறுத்துங்கள்.

(60 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.
  - சோம்பேறியாய் செயற்படுவதின் விளைவு (நீதி மொழி 6:11)
  - சோம்பேறி ஓய்வு எடுப்பதற்கு காரணம் கூறும் விதம் (நீதி மொழி 26 :13-15)
  - எமது அன்றாட உணவுக்காக இறைவனிடம் மன்றாட வேண்டும். (மத் 6: 11)
  - விண்ணகத்தில் செல்வத்தை சேர்ப்பதில் ஈடுபட வேண்டும். (மத் 6: 19-21)
  - நிவாரண பணியில் ஈடுபட்ட முறை (தி.ப 6:1)
  - துன்பங்களுக்கு மத்தியிலும் தங்களால் இயன்றதை கொடுப்பதன் முக்கியத்துவம். (2 கொரி 8: 1-5)
  - ஏழைகளைக் கவனத்திற்கொண்டு செயற்பட வேண்டும். (லூக் 16: 19-31)
  - எல்லாவற்றையும் விட்டுவிட்டு இறைவனை பின்பற்றுதல் (லூக் 18: 22)
  - சந்தோசத்தோடும் தியாக சிந்தையோடும் தமக்கு உரியதை பகிர்ந்தளிக்க வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (லூக் 18: 18-30, 16: 19-31, மத் 6: 11, 19-21, நீதிமொழி 26: 13-15, 6: 6-11, தி.ப 6: 1, 2 கொரி 8: 1-5)
- எறும்பின் பாடம் எழுதப்பட்ட பலகை
- A4 கடதாசி, பேனைகள், பிரிஸ்டல் மட்டை
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் - பின்வரும் கற்றல் பேறுகளைப் பயன்படுத்தி ஆயத்தம் செய்யுங்கள்**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- லூக் 18: 18-30, 16: 19-31, மத் 6: 11, 19-21, நீதிமொழி 26: 13-15, 6: 6-11, தி.ப 6: 1, 2 கொரி 8: 1-5 பகுதிகளை வாசியுங்கள்.
- இப்பகுதியைக் குறித்து கலந்துரையாடுங்கள்.
- ‘வறுமையை ஒழிப்போம்’ எனும் தலைப்பின் கீழ் ஆக்கபூர்வமாக முன்வைப்பதற்கு தயாராகுங்கள்.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

சோம்பலின்றி உழைப்பதற்கு பழக்குங்கள்.

**தேர்ச்சி 4.0** : இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்கம் நிறைந்த சமூகத்தை கட்டியெழுப்புவதில் பங்களிப்பு வழங்குவர்.

**தேர்ச்சி மட்டம் 4:6** : அல்லல்படுவோரின் விடுதலைக்காக உழைப்பர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள்** :

- இன்னல்கள், துன்பங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.
- துன்பப்படுகின்ற மக்கள் ஆறுதல் பெற வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கப்பூர்வமான செயற்பாட்டினை முன்வைப்பர்.
- இன்னல்களை தகர்த்தெறியச் செயற்படுவர்.
- துன்பப்படுகின்ற மக்கள் ஆறுதலடைய ஒன்றிணைந்து செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- மாணவருக்கு A4 கடதாசியை வழங்குங்கள்.
- பல்வேறு காரணங்களால் இன்னல், துன்பங்களுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களை எழுதி வகுப்பில் முன்வைப்பதற்கு ஒழுங்கு செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
    - இன்னல்கள் ஏற்படும்போது மனித வாழ்வு உள, உடல் ரீதியாக பாதிப்புக்குள்ளாகிறது.
    - இன்னல், துன்பங்களைத் தகர்த்தெறியச் செயற்பட வேண்டும்.
    - இன்னலுறும் சூழ்நிலைகளில் ஒருவருக்கொருவர் உதவி புரிய வேண்டும்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரைப் பொருத்தமான முறையில் சிறு குழுக்களாக பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கிக் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)
- மாணவரை அவதானித்து அறிவுறுத்துங்கள்.

(60 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப் படுத்துங்கள்.
    - இஸ்ரயேல் மக்கள் அடிமைத்தனத்தில் பல்வேறு துன்பங்களை அனுபவித்தனர்.
    - இஸ்ரயேல் மக்கள் துன்பகளின் மத்தியில் இறைவனிடம் முறையீடு செய்தனர்.
    - இறைவன் இஸ்ரயேல் மக்களின் துன்பங்களை கண்டார். (வி.ப 3: 9)
    - இறைவன் இஸ்ரயேலரின் முறயீட்டை கண்ணோக்கிய விதம். (வி.ப 2: 24)
    - இஸ்ரயேலரின் அழுகுரலுக்கு இறைவன் இரக்கம் காட்டினார்.
    - இயேசு சிறைபட்டோரை விடுதலையாக்கவும், பார்வையற்றோருக்கு பார்வையளிக்கவும் இவ்வுலகிற்கு வந்தார். (லூக் 4: 18)
    - துன்புற்ற மக்களுக்கு இயேசு ஆறுதல் அளித்தார்.
    - அழிவு இறைவனின் விருப்பம் அல்ல.

- இன்னலுறும் சந்தர்ப்பங்களில் இயேசுவின் ஆறுதலைப் பெற வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (வி.ப 2: 23-25, 3: 9, லூக் 4: 18, யோவான் 3: 16)
- A4 கடதாசி, பேனைகள், பிரிஸ்டல் மட்டை
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் - பின்வரும் கற்றல் பேறுகளைப் பயன்படுத்தி ஆயத்தம் செய்யுங்கள்**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1

## ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- வி.ப 2: 23-25, 3: 9, லூக் 4: 18, யோவான் 3: 16 பகுதிகளை வாசியுங்கள்.
- இப்பகுதியைக் குறித்துக் கலந்துரையாடுங்கள்.
- ஆக்கப்பூர்வமான செயற்பாட்டை முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

குழு 1 **'துனபுறுவோரை மீட்டெடுப்போம்'** எனும் தலைப்பின் கீழ் ஆக்கப்பூர்வமான செயற்பாட்டை முன்வையுங்கள்.

குழு 1 **'துன்பத்தை ஒழித்திடுவோம்'** எனும் தலைப்பின் கீழ் ஆக்கப்பூர்வமான செயற்பாட்டை முன்வையுங்கள்.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

துன்பங்ளை நீக்குபவராக செயற்படுவதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0** : திருவிவிலியத்தை வாழ்வுடன் கைகோர்த்துக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : நீதியுடன் கூடிய வாழ்வு வாழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- ஆமோஸ் முன்வைத்த நீதி, நேர்மை தொடர்பான இறைசெய்திக்கு பொருத்தமான கருத்துக்களை சேகரிப்பர்.
- நீதியாக வாழ வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- விவாதத்தை முன்வைப்பர்.
- நீதியுடன் கூடிய வாழ்வு வாழ்வர்.
- நீதிக்காக பிறருடன் இணைந்து குரல் கொடுப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- ஆண்டவரைத் தேடுங்கள். நீங்கள் வாழ்வீர்கள். (ஆமோஸ் 5: 6)
  தீமையை வெறுத்து நன்மையை நாடுங்கள்.(ஆமோஸ் 5: 15)
  நீதி வெள்ளமென பொங்கி வருக! நேர்மை வற்றாத ஆறாக பாய்ந்து வருக! (ஆமோஸ் 5: 24)
  எனும் வாக்கியங்கள் எழுதப்பட்ட அட்டையை வகுப்பில் காட்சிபடுத்துங்கள்
- மாணவர் அதனை வாசிப்பதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - ஆமோஸ் நீதியைக் குறித்து இறைவாக்குரைத்தார்.
  - நேர்மையின் முக்கியத்துவத்தைக் காட்டுதல்.
  - ஆமோஸ் நேர்மை வாழ்வின் முக்கியத்துவத்தை மக்களுக்கு வலியுறுத்தினார்.
  - தீமையை ஒழித்து நன்மையை நிலைநாட்ட வேண்டும்.
  - மனந்திரும்பி நல்வாழ்வு வாழ வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரைப் பொருத்தமான முறையில் சிறு குழுக்களாகப் பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கிக் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)
- மாணவரை அவதானித்து அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.
  - இஸ்ராயேல் மக்கள் அநீதியாக செயற்பட்டனர். (ஆமோஸ் 4 : 1)
  - அநீதிக்கு எதிராக குரல் கொடுத்தல் (ஆமோஸ் 4 : 4- 12)
  - இறைவன் வல்லமையுள்ளவர் என அறிவித்தல் (ஆமோஸ் 4: 13)
  - இறைவனிடம் திரும்புவதற்கு அழைப்பு விடுத்தல். (ஆமோஸ் 5:1- 13)

- நீதி, நேர்மையின் கொள்கை முன்வைக்கப்படல் (ஆமோஸ் 5: 14 - 25)
- நீதியுடன் கூடிய வாழ்வு வாழ வேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (ஆமோஸ் 4: , 5: )
- ஆமோஸ் 5: 6, 15: 15, 5: 24 இறைவார்த்தைகள் எழுதப்பட்ட அட்டைகள்.
- A4 கடதாசி, மாக்கர் பேனைகள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஆமோஸ் 4: , 5 ம் அதிகாரங்களை வாசியுங்கள்.
- இப்பகுதியில் குறிப்பிடப்படுகின்ற முக்கிய கருத்துக்களைக் குறிப்பெடுங்கள்.
- ‘ஆமோஸ் வலியுறுத்திய நீதியுடன் கூடிய சமாதானம் மற்றும் நேர்மை தற்கால சமூகத்திற்கு பொருத்தமானது / பொருத்தமானதல்ல’ எனும் தலைப்பில் விவாதமொன்றை ஆயத்தம் செய்து முன்வையுங்கள்.

**வீட்டுச் சூழல்**

நீதியோடும் நேர்மையோடும் வாழ்வதற்கு வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 5.0** : திருவிவிலியத்தை வாழ்வுடன் கைகோர்த்துக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 5.2** : புனித வாழ்வுக்கு இறைவழிகாட்டலைப் பெறுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- எசாயாவின் அழைப்பு, பணி குறித்த தகவல்களைச் சேகரிப்பர்.
- புனித வாழ்வு வாழ வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கபூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்.
- பாவங்களிலிருந்து மனந்திரும்புவர்.
- புனித வாழ்வு வாழ்வதன் முக்கியத்துவத்தை பிறருக்கு அறிவிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- திருப்பாடல்கள் 51: 9-10 பகுதியைக் கொண்டு சுவரொட்டியொன்றை தயாரித்து வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- பின்வரும் வினாக்களை மாணவரிடம் வினவுங்கள்.
  - இவ் அதிகாரம் திருவிவிலியத்தில் எந்த நூலில் எழுதப்பட்டுள்ளது?
  - இது யாரால் எழுதப்பட்டது?
  - இதன் பின்னணி என்ன?
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுங்கள்.
  - தாவீதால் எழுதப்பட்டதென திருப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
  - நாமும் பாவத்திற்கு உள்ளாகிறோம்.
  - தீமையை ஒழித்து நன்மையை நிலைநாட்ட வேண்டும்.
  - பாவங்களிலிருந்து விலகி வாழ்வைப் புதிதாக்கிக்கொள்ள வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரைப் பொருத்தமான முறையில் சிறு குழுக்களாக பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கிக் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)
- மாணவரை அவதானித்து அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.
  - எசாயா காட்சி கண்டார். (எசா 6: 1-4)
  - எசாயா இறைவன் முன் தமது பாவத்தை உணர்ந்தார்.
  - நாம் எமது பாவங்களையும் பெறுமதியற்ற நிலையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
  - இறைவன் இறைவாக்குரைக்கும் பணிக்கு அழைப்பு விடுத்தார். (எசா 6: 6)
  - இறை அழைப்புக்கு கீழ்ப்படிதல். (எசா 6: 8)

- இறைவன் எசாயாவை புனிதப்படுத்தினார். (எசா 6: 7)
- புனித வாழ்வுக்கான அழைப்பு எமக்கும் உள்ளது.
- புனித வாழ்வின் மூலம் இறை விருப்பத்தை நிறைவேற்றினார்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (எசாயா 6ம் அதிகாரம்)
- தி.பாடல்கள் 51: 9 - 10 அடங்கிய சுவரொட்டி.
- A4 தாள்கள், வர்ணப் பென்சில்கள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- எசாயா 6ம் அதிகாரத்தை வாசியுங்கள்.
- 'இறைவனால் புனிதப்படுத்தப்பட்டு விசேட பணிக்கான அழைப்பு பெற்ற எசாயா' எனும் தலைப்பின் கீழ் ஆக்கபூர்வமான அறிக்கையொன்றை எழுதுங்கள்.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைக்க ஆயத்தம் செய்யுங்கள்.

**வீட்டுச் சூழல்**

எப்போதும் இறைவார்த்தையால் இறை வழிகாட்டலை பெறுவதற்கு ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 5:0** : திருவிவிலியத்தை வாழ்வுடன் கைகோர்த்துக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 5:3** : சமாதானத்தை உருவாக்கப் பங்களிப்பு வழங்குவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- இறைவாக்கினர் மீக்காவின் சமாதானத்தின் செய்தி பற்றிய கருத்துக்களைச் சேகரிப்பர்.
- சமாதானத்தோடு வாழ வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- சுவரொட்டியொன்றை ஆக்கபூர்வமாக முன்வைப்பர்.
- சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக செயற்படுவர்.
- ஒற்றுமையான உலகை கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைந்து பங்களிப்பு வழங்குவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2 ஐ மாணவருக்கு வழங்குங்கள்.
- அதனை தாளத்துடன் பாடுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பாடலிலுள்ள கருத்துக்களைச் சிந்திப்பதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - எமது உள்ளத்தில் அமைதி காணப்பட வேண்டும்.
  - பிறருடன் சமாதானமாக வாழ வேண்டும்
  - இறைவன் சமாதான வாழ்வை விரும்புகிறார்.

(10epkplq;fs;)

**படிமுறை 2**

- மாணவரைப் பொருத்தமான முறையில் சிறு குழுக்களாக பிரித்து தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கிக் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். (இணைப்பு 1)
- மாணவரை அவதானித்து அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.
  - இறைவன் அனைத்துலக ஆட்சியை ஏற்படுத்துகிறார். (மீக்கா 4: 1-2)
  - பிறருடன் சமாதானமாக வாழ வேண்டும். (மீக்கா 4: 4)
  - இறைவன் எல்லா இனத்தாரையும் ஏற்றுக்கொண்டார். (மீக்கா 4 : 5)
  - இறைவன் சமாதானத்தை அருளிச் செய்வார். (மீக்கா 4 : 3)
  - இறைவன் ஒடுக்கப்பட்டவரையும் விரட்டியடிக்கப்பட்டோரையும் ஒன்றுசேர்ப்பவர். (மீக்கா 4: 6)
  - சமாதானமான வாழ்வை வாழ வேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (மீக்கா 4ம் அதிகாரம்)
- பாடல் பிரதிகள்
- பிரிஸ்டல் மட்டை, நிற பேனைகள்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாகக் கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- மீக்கா 4ம் அதிகாரத்தை வாசியுங்கள்.
- அதில் வெளிப்படுகின்ற சமாதானம் பற்றிய கருத்துக்களைக் கொண்டு சுவரொட்டியொன்றை தயாரியுங்கள்.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைக்க ஆயத்தம் செய்யுங்கள்.

**இணைப்பு 2**

நிலை மாறிய தேசத்தை நிலைநிறுத்த
எங்கள் இதயத்தில் திருமகனே பிறக்க மாட்டாயா?

இருண்ட எம் வாழ்வின் கதவுகள் திறக்க
திரண்டு அன்பாய் நாம் இணைந்திடுவோம்
பா தபக மகரி ரிக சரிகப
பகைமையை அறவே ஒழித்திடுவோம்
நேர்மை ஆற்றின் நீரால் மனிதம் செழிப்புற வேண்டும்
உடைந்த எங்கள் உள்ளம் அமைதி அடைந்திட வேண்டும்
நிலைமாறிய ..........
மனதில் கசப்பினை நினைப்பதை மறந்து
வசந்தத்தின் வாழ்வுக்கு வழிசமைப்போம்
பா தபக மகரி ரிக சரிகப
அநீதியை அறவே ஒழித்திடுவோம்
சாதியின் இருளில் இருந்து மனிதம் மீண்டிட வேண்டும்
நீதியின் தீபம் ஏற்றி தேசம் ஒளிபெற வேண்டும்.

**வீட்டுச் சூழல்**

சமாதானத்தோடு வாழ பழக்குங்கள்.